வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 13.06.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 192 | பக்கங்கள் : 16



# எரிபொருள் விலை உயர்வால் அரச தரப்புக்குள் கொந்தளிப்பு

## உதய கம்மன்பிலவை பதவி விலக வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 13

எரிபொருட்களின் திடீர் விலையேற்றத்தை யடுத்து ஆளும் பொதுஜன பெரமுனவில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், இதற்குப் பொறுப்பேற்று விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் உதய கம்மன்பில பதவி விலகவேண்டும் என பொதுஜன பெரமுன உத்தியோகபூர்வமாக வெளியிட்ட அறிக்கை ஒன்றில் வலியுறுத்தியுள்ளது.

15

## கம்மன்பிலவின் கதியை நினைத்து கவலைப்பட எதுவும் இல்லை

### மனோ கணேசன் சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 13

“அமைச்சர் உதய கம்மன்பிலவின் கதியை நினைத்து கவலைப்பட ஏதுமில்லை” என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்திருக்கின்றார்.

அமைச்சர் உதய கம்பன்பில எரிபொருள் விலையேற்றத்துக்குப் பொறுப்பேற்று பதவி விலக வேண்டும் என ஆளும் பொதுஜன பெரமுன கோரிக்கை

15

## பேக்கரி உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்படலாம்

கொழும்பு, ஜூன் 13

பேக்கரி உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப் படலாம் என இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்த்தன தெரிவித்தார்.

பிரதான மா இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கு மாவின்

15

## எரிபொருள் விலை உயர்வை உடன் இரத்துச் செய்யுங்கள்!

### அரசிடம் ஜே.வி.பி. வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 13

எரிபொருள் விலை அதிகரிப்பை அரசு உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது.

தொற்று நோய் மற்றும் ஜீவனோபாய இழப்பால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு எரிபொருள் விலை அதிகரிப்பு மேலும் சுமையாக அமைந்துள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

எரிபொருள் விலையை நிலையாக

15

### போலிச் செய்திகளை கையாள்வதற்கு

## பொலிஸாருக்கான அதிகாரம்: சட்டத்தரணிகள் போர்க்கொடி!

கொழும்பு, ஜான் 13

இலங்கையில் போலிச் செய்திகளை கையாள்வதற்குப் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தமது கண்டனத்தையும் கவலை

15

## வெள்ளவத்தையில் கொரோனா தீவிரம்

### ஒரு பகுதி தனிமைப்படுத்தல்

கொழும்பு, ஜூன் 13

கொழும்பில் வெள்ளவத்தையில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருவதாகவும் பல நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் 68 க்கும் அதிகமான நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் நேற்றும் பல நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ள

15

## தொடர் முடக்கத்தால் பாதிக்கப்பட்ட மாணவரின் கல்விக்கு உதவுங்கள்

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 13

“நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அபாயகரமான சூழ்நிலையால் தொடர் முடக்கம் ஏற்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகள் சீரான கற்றல் நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. இதனை ஈடு செய்ய உதவுங்கள்.”

- இவ்வாறு வேண்டு

15

### பறிபோகும் நிலையில் ஜி.எஸ்.பி. பிளஸ்

## சர்வதேச அழுத்தத்துக்கு ராஜபக்ஷ அரசே காரணம்

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 13

“ராஜபக்ஷ அரசின் முறையற்ற கொள்கைகள் மற்றும் தவறான செயற்பாடுகளின் விளைவாகவே ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கான தீர்மானம் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்

15

## நேற்றும் 2,340 பேருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, ஜூன் 13

நாட்டில் நேற்றும் 2 ஆயிரத்து 340 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம்

15




## யாழ்.குடாநாட்டில் 86 பேர் உட்பட வடக்கில் 99 பேருக்கு தொற்று!

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 86 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 99 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று 544 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன் அடிப்படையில்,

யாழ்.மாவட்டத்தில் 86 பேர்

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 30 பேர்,

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 28 பேர்,

யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 12 பேர்,

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 11 பேர்,

15

## இப்படியும் நடக்கிறது...!

இது ஒரு நேர்முக தேர்வு. துப்பறியும் உத்தியோகத்தர்களுக்கான நேர்முகத்தேர்வு நடந்துகொண்டிருந் தது.

அதில் கலந்துகொள்ள இரண்டு நண்பர்கள் ஒன்றாக வந்திருந்தனர்.

முதலில் ஒருவர் நேர்முகத் தேர்வுக்கு பிரசன்னமாகினார்.

அவரிடம் ஒரு குற்றவாளியின் படத்தை காட்டினார்கள். அவரது முகத்தை நேரடியாக காட்டாமல், அவரை ஒரு பக்கமாக திரும்பி நின்றவாறு எடுக்கப்பட்ட படம் அது.

அந்தப் படத்தைக் காட்டி எப்படி இவரை அடையாளம் காணுவீர்? என்று கேட்கப்பட்டதற்கு அவர் சர்வசாதாரணமாக சொன்னார், வெகு சுலபம் சேர், அவருக்கு ஒரு கண்ணும் இரு காதும்தானே இருக்கு. அதை வைச்சு கண்டுபிடிச்சிடலாம்.

அதிகாரிகள் அந்த முட்டாளை திருப்பி அனுப்பினார்கள்.

அடுத்தவர் வந்தார். அவரிடம் படத்தைக் காட்ட, அவர் கொஞ்சம் யோசித்துவிட்டுச் சொன்னார், இவர் 'கொன்ராக் லென்ஸ்' தான் பாவிக்கிறவர். அதை வைச்சு கண்டுபிடிச்சிடலாம்.

அந்த அதிகாரிகளுக்கு யோசனை. உடனே, அந்த குற்றவாளியின் பைலை எடுத்து பார்த்தார்கள். ஆம் அவர் 'கொன்ராக் லென்ஸ்' தான் பாவிப்பவர் என்று தெரியவந்தது.

அதிகாரிகளுக்கு ஆச்சரியம். எப்படி சரியாக கண்டுபிடித்தீர்? என்று கேட்டார்கள்.

அவர் சொன்னார், அவருக்கு ஒரு கண்ணும் ஒரு காதும்தானே இருக்குது. அவர் கண்ணாடி போட ஏலாதே என்று.

இந்தக் கதைக்கும் இனி சொல்லப்போகும் விடயத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து நண்பர் ஒருவர் பேசினார். எழுபதுகளைக் கடந்தவர் அவர். சிறு வயதிலிருந்து இடதுசாரி இயக்கங்களுடன் தீவிரமாக இயங்கியவர். ஓர் இடதுசாரிப் போராளி என்றுகூட சொல்லலாம்.

'எப்போதும் நாங்கள்தான் அடிக்கடி சொல்லுவோம். தமிழ் அரசியல் தலைவர்கள் தெற்கில் மக்களோடு பழக வேண்டும். எமது பிரச்னைகளை அவர்களுக்கு சொல்ல வேண்டும் என்று. இன்று பார்த்தீரா சுமந்திரனும் சாணக்கியனும் பாணந்துறையில் ஒரு மரணவீட்டுக்கு போயிருக்கிறார்கள். நல்ல அறிகுறி தோழர்' என்றார் அவர்.

'நல்ல விசயம்தான். ஆனால் இதை உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு இருந்த போது செய்திருக்கவேண்டும்' என்றேன் நான்.

'அதுசரி தோழர், நீங்கள் நமது பிரச்னைகளை சிங்கள மக்களுக்கு சொல்லவேண்டும் என்பதற்காக தெற்கில் பிரச்சாரம் செய்யவேண்டும் என்று கூறியவர். அது தேவையானதுதான், ஆனால் இவர்கள்

அங்கு போய், அரசின் நடவடிக்கைகளை கண்டித்தார்களே தவிர, அரசு இங்கே செய்வதைவிட வடக்கில் இன்னும் அராஜகமாக செயற்படுகின்றது. எங்களை தமிழர்கள் என்பதற்காக துன்புறுத்துகின்றது என்றல்லவா கூறியிருக்கவேண்டும்' என்றேன் நான்.

இப்படித்தான் மட்டக்களப்பிலும் ஒருவர் போதைவஸ்து வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பின்னர் பொலிஸ் காவலில் இருந்தபோது மரணமானார். உடனே, பொலிசார் அவரை அடித்துக் கொன்றுவிட்டார்கள் என்று குற்றம்சாட்டினோம். ஆனால் அவர் போதைவஸ்தை அதிகமாக உட்கொண்டதால்தான் மரணமானார் என்று பிரேத பரிசோதனையில் தெரியவந்ததும், நம்மவர்கள் அடங்கி விட்டனர்.

அதுபோலத்தான் பாணந்துறை சம்பவமும். தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியதாக கைதுசெய்யப்பட்டவர் பொலிஸ் வாகனத்தில் ஏற்றப்படும்போது தவறி விழுந்ததில் மரணித்ததாக கூறப்பட்டது. உடனே அரசுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. நமது தலைவர்களும் மரணச்சடங்கில் கலந்து கொண்டு, இன ஒற்றுமையை வெளிப்படுத்தினர். எந்த மரணமும் எதனால் ஏற்பட்டது என்பதை அறிந்த பின்னர், கண்டனங்களைத் தெரிவிப்பதே புத்திசாலித் தனமானது.

இனி என்ன, இலங்கை நீதிமன்றங்களில் நம்பிக்கை இல்லை என்பதுபோல, பிரேத பரிசோதனையிலும் நம்பிக்கை இல்லை என்று சொல்லத் தொடங்குவோமோ?

- ஊர்க்குருவி

# பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்கும்போது குழந்தை மருத்துவர்கள் உதவியை பெறுங்கள்

### கல்வி அதிகாரிகளுக்கு பிரதமர் மஹிந்த ஆலோசனை

**கொழும்பு, ஜூன் 13**

**கொவிட்-19 தொற்று காரணமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீண்டும் திறக்கும்போது பிள்ளைகளின் நோய்கள் மற்றும் பிரச்சினைகளை கண்டறிய குழந்தை மருத்துவர்களின் உதவியை பெறுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கல்வி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.**



பாடசாலைகளை மீள ஆரம்பித்தல் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு கொவிட் நோய் எதிர்ப்பு தடுப்பூசிகளை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தி அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொவிட் தொற்று நிலைமை கட்டுப்படுத்தப் பட்ட பின்னர் உடனடியாக கட்டம் கட்டமாக பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதன் முக்கியத்து வம் குறித்து சுட்டிக்காட்டிய பிரதமர், ஆசிரியர் களுக்கான தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை சுகாதார அமைச்சின் ஊடாக நிறைவேற்றிக் கொள்ள முடியும் என சுட்டிக் காட்டினார்.

குறித்த கலந்துரையாடலில் கலந்துக்கொண்ட குழந்தை மருத்துவர்களின் சங்கத்தின் பிரதிநிதிகள் பாடசாலைகளை மீள திறக்கும்போது ஏற்படக் கூடிய பிரச்சினைகளை தவிர்ப்பதற்கு தமது சங்கத்தின் ஆதரவை கல்வி வலய மட்டத்தில் பெற்றுக்கொடுக்க முடியும் என பிரதமர் முன்னிலையில் தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைய நாடு முழுவதும் உள்ள 99 கல்வி வலயங்களுக்கும் தமது சங்கத்தின் சார்பில் பிரதிநிதிகளை பெயரிட்டு மேற்படி நடவடிக்கையை முறையாக முன்னெடுப்பதாக சங்கத்தின் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர். பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான தடுப்பூசி திட்டமொன்று செயற்படுத்தப்படின் அதன்போது தரம் 11 மற்றும் தரம் 13 மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

இப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு சுமார் இரண்டு இலட்சத்து எழுபத்து ஒன்பது ஆயிரம் ஆசிரியர்கள் மற்றும் சுமார் மூன்று இலட்சம் கல்விசாரா ஊழியர்கள் உள்ளிட்டோருக்கு தடுப்பூசி வழங்குவதன் முக்கியத்துவமும் பேராசிரியர் கபில பெரேரா அவர்களினால் சுட்டிக்காட்டப்பட்டது.

நாட்டின் எதிர்கால சந்ததியினர் மற்றும் அவர்களை வழிகாட்டும் ஆசிரியர்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் எப்போதும் நடவடிக்கை மேற்கொள்ளும் என பிரதமர் இதன்போது நம்பிக்கை தெரிவித்தார்.

பாடசாலை ஆரம்பிக்கும் போது மாணவர்களும் ஆசிரியர்களும் பாதுகாப்பான முறையில் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவது தொடர்பான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும் என்று தெரிவித்த பிரதமர். பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து நடவடிக்கையின் போது பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறும் கேட்டுக் கொண்டார்.

# பொலிஸ் கைதை படமாக்கிய யுவதி அதி உயர் ஊடக விருது பெறுகிறார்

*வாஷிங்டன், ஜூன் 13,*

அமெரிக்காவில் ஊடகத் துறையின் உயர் விருது அந்தத் துறை சாராத கறுப்பின இளம் பெண் ஒருவருக்கு வழங்கப்படுகிறது. உலகெங்கும் அதிர்வை ஏற்படுத்திய கறுப்பின மனிதர் ஜோர்ஜ் புளொய்ட்டின் (George Floyd) கொலையின் போது வெள்ளை இனப் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்ட காட்சியைத் தனது தொலைபேசியில் பதிவு செய்து அவரது மரணத்தின் முக்கிய ஆதார சாட்சியாக மாறியவர் டார்னெல்லா பிரேஷியர் (Darnella Frazier) என்னும் 18 வயது யுவதி.

அவர் பதிவு செய்த சிறிய வீடியோ காட்சி உலகெங்கும் வெளியாகி இன நீதிக்கான பெரும் போராட்டங்கள் வெடிக்கக் காரணமாகியது.தக்க தருணத்தில் அந்த யுவதி செய்த துணிகரச் செயலுக்கான சான்றாக 'புலிட்ஷர்' (Pulitzer Prize) என்கின்ற ஊடகத்துறை கௌரவ விருது அவருக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

"பத்திரிகையாளர்களின் உண்மை மற்றும் நீதிக்கான தேடுதல்களில் சாதாரண சிவிலியன்களது பங்கு எத்தகையது என்பதற்கு யுவதியின் செயல் ஓர் எடுத்துக்காட்டு" என்று 'புலிட்ஷர்' விருதுக் குழு தெரிவித்திருக்கிறது.

'புலிட்ஷர்' விருது அமெரிக்காவில் ஊடகவியல், இணைய ஊடகவியல், இலக்கியம், இசையமைப்பு போன்ற துறைகளுக்காக ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற அதி உயர் விருது ஆகும். அமெரிக்காவின் மினியாபோலிஸ் பகுதியில் கடந்த ஆண்டு மே 25 ஆம் திகதி ஜோர்ஜ் புளொய்ட் கைது செய்யப்பட்ட வேளை யுவதி டார்னெல்லா தனது உறவினர் ஒருவருடன் வீதியில் சென்றுகொண்டிருந்தார்.

கைதின்போது பொலீஸ் அதிகாரி ஒருவரது பிடியில் புளொய்ட்டின் குரல்வளை நெரிக்கப்பட்டதில் அவர் மூச்சுத் திணறி உயிரிழந்தார்.




"ஒரு மனிதன் கொடுமைப்படுத்தப்படுவதையும் உயிருக்காக இறைஞ்சுவதையும் கண்டேன். ஜோர்ஜ் புளொய்டை எனது தந்தையாக - சகோதரனாக - மாமனாக- பார்த்தேன். ஏனெனில் அவர்கள் அனைவரும் கறுப்பர்கள். அவர்களில் ஒருவராக இருப்பதால் என்ன நேரும் என்பதை உணர்ந்தேன்."

இவ்வாறு அந்த யுவதி பின்னர் நீதிமன்றத்தில் சாட்சியமளித்தபோது கண்ணீருடன் கூறியிருந்தார். அவர் பதிவு செய்த வீடியோ உலகெங்கும் வைரலாகப் பரவி பெரும் ஆர்ப்பாட்டங்களை உருவாக்கியது. பொலீஸ் அராஜகங்களின் ஓர் அடையாளமாக மாறியது. இனவெறிக்கு எதிரான கிளர்ச்சிக்கு வித்திட்டது.

இம்முறை 'புலிட்ஷர்' குழுவின் 105 ஆவது ஆண்டு விருதுகள் ஆபிரிக்க -அமெரிக்க கறுப்பினத்தவர்கள் மீதான கொடுமைகளை முன்னிலைப்படுத்தும் வகையில் ஜோர்ஜ் புளொய்ட் கொலையுடன் தொடர்புடையவையாக அமைந்துள்ளன.

புளொய்டின் கொலைச் சம்பவத்தை முதலில் வெளியிட்ட மினியாபோலிஸ் நகர உள்ளூர் ஊடகமான 'Minneapolis Star Tribune' பத்திரிகைக்குச் சிறந்த 'பிறேக்கிங் நியூஸுக்கான(breaking news) 'புலிட்ஷர்' விருது கிடைத்திருக்கிறது.

ஈழநாடு
Eelanadu
13.06.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# இலங்கையின்மீது மேலுமொரு பிடி!

இந்த ஆண்டு மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கையின்மீது புதியதொரு பிரேரணை நிறவேற்றப்பட்டது. இது, ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகவே இருந்தது. அரசாங்கம் ஐ. நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திலிருந்து வெளியேறுவதாக அறிவித்திருந்தது. இந்த நிலையில் புதியதொரு பிரேரணை முன்வைப்பதை தவிர வேறு தெரிவுகள் இருந்திருக்கவில்லை. புதிய பிரேரணையின்மூலம் இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் மீண்டும் மேற்குலகில் பேசுபொருளானது.

2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து, புதிய அரசாங்கம் ராஜபக்ஷக்களின் தவறுகளை சரிசெய்வதாக சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதியளித்திருந்தது. 2015இல், மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு இணையனுசரணை வழங்கியதன் மூலம், சர்வதேச அழுத்தங்களை முடிவுக்கு கொண்டுவந்தது. ஓர் அரசாங்கம் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக, உள்நாட்டுக்குள் விடயங்களை முன்னெடுப்பதாக வாக்குறுயளிக்கும் போது, வெளித் தலையீடுகள் தேவையற்றதாகின்றது. ரணில்-மைத்திரி அரசாங்கம் அவ்வாறானதோர் அணுகுமுறையையே கடைப்பிடித்தது. ஆனால், மீண்டும் ராஜபக்ஷக்கள் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றியபோது, மீளவும் அரசியல் கடிகாரத்தின் முள்ளு பழைய காலத்திற்கு சென்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தற்போது ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தில் இலங்கையின் மீதான பிரேரணை 628 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதி ஒருவர் முன்வைத்த பிரேரணை தொடர்பில், அரசாங்கம் கண்டனங்களை வெளியிட்டிருந்த நிலையில்தான், தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் இலங்கையின்மீதான பிரேரணை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

ஐரோப்பிய ஒன்றியம் 27 நாடுகளை கொண்டிருக்கும் அரசியல் பொருளாதார ஒன்றியமாகும். உலக அரசியல் ஒழுங்கை தீர்மானிப்பதில் இது ஒரு சக்திவாய்ந்த கட்டமைப்பாகும். கடந்த ஆண்டு ஜனவரியில், மனித உரிமைகளை மோசமாக மீறிவரும் நாடுகள்மீது பொருளாதார தடைகள் மற்றும் அழுத்தங்களை ஏற்படுத்தும் நோக்கில், உலகளாவிய கட்டமைப்பு ஒன்றிற்கான ( global human rights sanctions regime) தீர்மானத்தையும் ஒன்றியம் நிறைவேற்றியிருந்தது.

இது தொடர்பில் 'ஈழநாடு' முன்னரே தெரியப்படுத்தியிருந்தது. அதேவேளை, ஐரோப்பிய ஒன்றியம் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பது தொடர்பிலும் நாம் அறிவுறுத்தியிருந்தோம். நாம் எதிர்பார்த்ததுபோன்றே, தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை தொடர்பில் பிரேரணையொன்று கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

குறித்த பிரேரணை இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் எச்சரித்திருப்பதுடன், இலங்கைக்கு வழங்கப்பட்டுவரும் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை இடைநிறுத்துமாறும் பரிந்துரைத்திருக்கின்றது. ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை என்பது, இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஆடை உற்பத்திகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் விசேட வரிச் சலுகையாகும். 628 உறுப்பினர்களின் ஆதரவுடன் மேற்படி பிரேரணை நிறைவேற்றப்பட்டிருப்பதால், வரிச்சலுகை இடைநிறுத்தப்படுவதற்கான வாய்ப்பே இருக்கின்றது. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, மனித உரிமைகள் விடயத்தில் முன்னேற்றங்களை காண்பிக்க மறுத்ததால், ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை இடைநிறுத்தியிருந்தது. பின்னர், ரணில்-மைத்திரி அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் விளைவாக, 2017இல் மீளவும் வரிச்சலுகையை இலங்கை பெற்றுக்கொண்டது.

இந்த வரிச்சலுகை மீளவும் இடைநிறுத்தப்படுமானால், இலங்கை பொருளாதார ரீதியில் மேலும் நெருக்கடிகளை சந்திக்கும்.




# பெருந்தொற்றின் பின் தலைவர்கள் 'மாஸ்க்' இன்றி கூடும் முதல் மாநாடு

## மகாராணியும் வந்து வரவேற்றார்!

குமாரதாஸன்

*ஜீ-7 மாநாட்டுக் குழுவின் தலைவர்களை மகாராணி எலிஸபெத் தலைமையில் அரச குடும்பத்தினர் வரவேற்றுள்ளனர். இங்கிலாந் தின் கடற்கரை பிரதேசமான கார்பிஸ் பேயில் (Carbis Bay) முக்கிய நாடுகளது தலைவர்கள் கூடும் மாநாடு வெள்ளிக்கிழமை தொடங்கியுள்ளது.*

*மாநாட்டில் பிரதமர் பொறிஸ் ஜோன்சனுடன் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், ஜேர்மனிய அதிபர் அங்கெலா மெர்கல், பிரெஞ்சு அதிபர் மக்ரோன், ஜப்பானியப் பிரதமர் யோஷிஹைட் சுகா, கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இத்தாலியப் பிரதமர் மரியோ ட்ராகி ஆகியோர் பங்கு கொள்கின்றனர்.இவர்களுடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவி உர்சுலா வான் டெர் லேயன் (Ursula von der Leyen) அவர்களும் அங்கு பிரசன்னமாகி உள்ளார்.*

*சுமார் பதினெட்டு மாதங்கள் நீடித்த பெரும் தொற்றுநோய்க் காலத்தின் பிறகு பிரதான நாடுகளின் தலைவர்கள் முகத்துக்கு நேரே - சந்தித்துள்ளனர். வீடியோ வழியாக டிஜிட்டல் திரைகளில் நடைபெற்றுவந்த பல கூட்டங்களுக்குப் பிறகு தலைவர்கள் நேரில் - 'மாஸ்க்' அணியாமல் - சந்தித்துக் கொண்ட மாநாட்டின் காட்சிகள் லண்டனில் வெளியாகி உள்ளன.*

*ஏழு நாடுகளின் தலைவர்களை அரச குடும்பத்தினர் வரவேற்கின்ற நிகழ்வு ஏடன் உள்ளக மழைக்காட்டு மையத்தில் (Eden Project, indoor rainforest centre) நடைபெற்றது. அரச குடும்பத்தவர்களும் தலைவர்களும் 'மாஸ்க்' அணியாதவர்களாக - நெருங்கி அளவளாவி உள்ளனர்.*

*கொரோனா வைரஸ் தடுப்பூசிப் பங்கீடு, பருவநிலை மாற்றம் ஆகிய இரு விடயங்கள் ஏழு தலைவர்கள் மாநாட்டின் முக்கிய விவகாரங்களாக விவாதிக்கப்படவுள்ளன. "கடந்த 18 மாதகாலப்பகுதியில் விட்ட தவறுகள் மீள*



*நிகழாமல் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதுமுக்கியமானது" - என்று மாநாட்டை நடத்துகின்ற இங்கிலாந்தின் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் தொடக்க உரையில் தெரிவித்திருக்கிறார்.*


*டொனால்ட் ட்ரம்ப் காலத்தில் தனிமைப்பட்டுப் போயிருந்த அமெரிக்காவின் முக்கியத்துவத்தை சர்வதேச அரங்கில்மீள நிறுவ வேண்டிய பொறுப்போடு புதிய அதிபர் பைடன் இந்த மாநாட்டில் தனது சகாக்களை எதிர்கொள்கிறார்.*

*கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து ஐரோப்பாவும் பல உலக நாடுகளும் மெல்ல மீண்டு வருகின்றன. எனினும் இங்கிலாந்தில் வைரஸ் திரிபுகளது தொற்றுக்கள் அதிகரிப்பதால் கட்டுப்பாடுகளில் இருந்து நாட்டை முற்றாக விடுவிக்கின்ற இறுதி நாளைத் தள்ளிப்போடுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.*

*மாநாடு நடைபெறுகின்ற பகுதியில் ஊடகவியலாளர்கள் மற்றும் பணியாளர்கள் தங்குகின்ற ஹொட்டேல் ஒன்று தொற்றுக் காரணமாக மூடப்பட்டுள்ளது.*

*அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருக்கின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஒருவருக்கும் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜுன் - 13 ஞாயிற்றுக்கிழமை**
**பிலவ வருடம் - வைகாசி 30**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 9.00 |
| ராகு காலம் | : | 4.30 - 6.00 |
| திதி | : | திரிதியை |



## இன்றைய ராசிபலன்

**13.06.2021**

**மேடம்**
அலைபேசி மூலம் கேட்கும் செய்தி மகிழ்ச்சி தரும். பிரகாசமான வாய்ப்பு வரும். எடுத்த செயலில் வெற்றி காண்பீர்கள். தெளிவான தீர்மானங்களால் பணியிடத்தில் நல்லபெயர் வரும்.

**இடபம்**
புது வேலை கிடைக்கும். பணியாளர்களுக்கு உற்சாகம் கிடைக்கும். விட்டுக் கொடுப்பீர்கள் என்பதால் பிரச்னைகள் நீங்கும். கிடைக்கவிருக்கும் நன்மையை யாராலும் அசைக்க முடியாது.

**மிதுனம்**
வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வதில் தடைகள் வரக்கூடும். தம்பதிகள் மூன்றாவது நபரின் தலையீட்டை அனுமதிக்க வேண்டாம். புதிய அதிர்ஷ்டம் வரும். மதிப்பு அந்தஸ்து அதிகரிக்கும்.

**கடகம்**
விடிவு காலம் ஆரம்பமாவதற்கான அறிகுறிகள் தோன்றும். குடும்பத்தில் இருந்துகொண்டிருந்த குழப்பங்கள் நீங்கும். வாய்ப்பைப் பயன்படுத்தி முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்**
கவனம் சிதறும். யாரிடமும் வீண் வாக்குவாதங்கள் வேண்டாம், மூத்தவர்களுடன் நேற்று இருந்த சச்சரவுகள் நீங்கும். மனம் மகிழ்ச்சியடையும் படியான சம்பவங்கள் நடைபெறும்.

**கன்னி**
வீண் விரயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனம் தேவை. நீங்கள் எதிர்பார்த்த மாற்றம் தாமதித்தே வரும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல செய்தி மெயிலில் வரும்.

**துலாம்**
தாயாரின் ஆரோக்கியம் பற்றிய பழைய பயம் தீரும். பெற்றோரின் ஆரோக்கியத்தில் சற்று கவனமாக இருக்க வேண்டும். எதிர்பாலினத்தினரிடம் பழகும்போதும், பேசும்போதும் கவனம் தேவை.

**விருட்சிகம்**
திருப்தியான நாளாகும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். அலுவலகப் பணிகளில் நிதானமாக செயல்படுவது நல்லது. பேச்சிலும், செயலிலும் கவனமாக இருந்தால் கவலை ஏதுமில்லை.

**தனுசு**
நண்பர்களிடையே வாக்கு வாதங்கள், மன உளைச்சல் இருக்கும். முயற்சிகளில் வெற்றி வரும். எதிர்பார்த்த நன்மை நிகழும். குடும்பக் கவலைகள் மறையும். செலவை சமாளிக்க முடியும்.

**மகரம்**
நல்ல தகவல் வரும். காதலர்களுக்கு உதவிகள் கிடைக்கும். நேர்மையான எண்ணங்கள் உருவாகும். தேவையற்ற பயம் தீரும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டு. கனவு நனவாகும்.

**கும்பம்**
சிறிய வெற்றி ஏற்படும். மனநிறைவு உண்டு. பேச்சாற்றலால் அலுவலகத்தில் பணிகளை முடித்துக் காட்டுவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி ஏற்பாடாகும்.

**மீனம்**
பகையைவிடுத்து நட்பாவது பற்றிச் சிந்திப்பீர்கள். லாபம் உயரும். கற்பனை வளம் அதிகரிக்கும். காதல் கைக்கூடும் வாய்ப்புள்ளது. முந்தைய முயற்சியில் வெற்றி வரும். முன்னேற வழி கண்டறிவீர்கள்.

# மோடியை சந்திக்கின்றார் ஸ்டாலின் தமிழக அரசியலில் புதிய திருப்பம்?



*சென்னை, ஜுன் 13*

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திப்பதற்காக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் எதிர்வரும் 16 ஆம் திகதி புது டில்லி பயணம் மேற்கொள்ள இருப்பதாக தமிழக அரசு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

வழக்கமாக மாநில முதல்வர்கள் பதவியேற்றுக் கொண்டதும் புதுலில்லி பயணம் மேற்கொண்டு பிரதமரை சந்தித்துப் பேசுவது இந்திய அரசியலில் இயல்பான ஒன்றுதான். அந்த வகையில் தமிழக முதல்வராக மே 7 ஆம் தேதி பொறுப்பேற்ற ஸ்டாலின், கொரோனா தடுப்புப் பணிகளில் தீவிரம் காட்டியதால் ஆட்சி மாற்றத்துக்குப் பின் செய்ய வேண்டிய இயல்பான செயல்பாடுகளில் கூட கவனம் செலுத்த முடியவில்லை. தற்போது ஊரடங்கு மேலும் நீடிக்கப்பட்டு கொரோனா தொற்று எண்ணிக்கையும் குறைந்து வருகிறது.

இந்த நிலையில் முதல்வர் ஸ்டாலின் வரும் 16 ஆம் திகதி டில்லிக்கு சென்று அங்கே குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்த், பிரதமர் மோடி, மற்றும் ஒன்றிய அமைச்சர்கள் அமித் ஷா, நிர்மலா சீதாராமன் ஆகியோரயும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோரையும் சந்திக்க திட்டமிட்டுள்ளார்.

முதல்வராக பொறுப்பேற்ற பின் முதல் முறை டில்லி பயணம் என்பதால் இது தமிழ்நாட்டுக்கு அரசு ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்தததாக கருதப்படுகிறது. ஏற்கனவே அதிமுகவில் பரபரப்பைக் கிளப்பி வரும் சசிகலா தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் டில்லி சென்று பிரதமர் மோடியை சந்திக்கும் தினத்துக்காகத்தான் காத்திருக்கிறார்.

மோடி - ஸ்டாலின் நேருக்கு நேர் சந்தித்த பிறகு அ.தி.மு.கவில் எடப்பாடி பழனிசாமி மீதான ஒன்றிய அரசின் அணுகுமுறையில் மாற்றம் இருக்கும் என்று எதிர்பார்க்கிறார் சசிகலா. பாஜக - தி.மு.க. ஒன்றிய மாநில அரசுகளுக்கு இடையிலான இணக்கத்திலும் இந்த பயணம் முக்கியப் பங்காற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே ஸ்டாலினின் டில்லி பயணத்துக்குப் பின் தமிழகத்தில் அரசியல் ரீதியான மாற்றங்கள் ஆரம்பமாகலாம்.

# தமிழகத்திலிருந்து படகில் இலங்கை வர முயன்ற பிரித்தானியர் அதிரடியாக கைது





*சென்னை, ஜுன் 13*

தமிழகத்தின் தூத்துக்குடி கடற்கரையில் இருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாக படகில் வருவதற்கு முயன்ற பிரித்தானியர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை தூத்துக்குடி கடற்பகுதியில் வைத்து தமிழக கியூ பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளார்.

தூத்துக்குடி அருகே உள்ள தாளமுத்துநகர் முத்த ரையர் கடற்கரை பகுதியில் 50 வயது மதிக்கத்தக்க குறிப்பிட்ட பிரித்தானியர் சந்தேகப்படும்படியாக சுற்றி வருவதாக கியூ பிரிவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதைத்தொடர்ந்து அவர்கள் அந்த இடத்துக்கு விரைந்து சென்றனர். அங்கு சுற்றிக் கொண்டு இருந்தவரை மடக்கி பிடித்து கியூ பிரிவு பொலிஸ் அலுவலகத்துக்கு அழைத்து சென்று விசாரணை நடத்தினர். அவரிடம் பிரித்தானிய கடவுச்சீட்டு மற்றும் இந்திய, இலங்கை பணமும் இருந்துள்ளது.

விசாரணையில், பிடிபட்டவர் பிரித்தானி யாவைச் சேர்ந்த ஜோனாதன் தோர்ன் (வயது - 47) என்பது தெரியவந்தது. இவர் இந்தியா வாழ் வெளிநாட்டினருக்கான, ஓ.சி.ஐ. என்ற அட்டை வைத்திருந்தார். இவர் கோவாவில் இருந்து விமானம் மூலம் பெங்களூருக்கு வந்து உள்ளார். அங்கிருந்து வாடகைக்கு கார் எடுத்துக் கொண்டு கடந்த 9 ஆம் திகதி தூத்துக்குடிக்கு வந்துள்ளார். தூத்துக்குடியில் உள்ள பிரபல ஓட்டலில் தங்கி இருந்தாராம். பின்னர் தூத்துக்குடியில் இருந்து படகு மூலம் சட்ட விரோதமாக இலங்கைக்கு செல்ல திட்டமிட்டு இருந்தாராம். இதற்காக கடற்கரையில் நின்ற போதுதான் அவர் பிடிபட்டுள்ளார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதம் மும்பை மற்றும் கோவா பகுதிகளில் மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் 226 கிலோ கேட்டமைன் போதை பொருளை பறிமுதல் செய்தனர்.

இந்த வழக்கில் ஜோனாதன் தோர்ன் கைது செய்யப்பட்டார். இதற்காக 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை சிறையில் இருந்துள்ளார். பின்னர் வெளியில் வந்தவர், இதுவரை 60 நாடுகளுக்கு சென்று இருப்பது தெரியவந்து உள்ளது. கியூபிரிவு பொலிஸார் ஜோனாதன் தோர்ன் மீது கடவுச்சீட்டு முறைகேடு வழக்கு பதிவு செய்து கைது செய்தனர்.

# யாழில் கொரோனா தொற்று வெகுவாக அதிகரிக்கின்றது!



## மக்கள் மிக அவதானமாகச் செயற்படவேண்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்று அதிகரித்த நிலை காணப்படுவதால் பொதுமக்கள் மிக அவதானமாக செயற்படுமாறு யாழ்.அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார் .

யாழ் மாவட்ட செயலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்பொழுது கொரோனா தொற்று குறைந்த நிலைமை இல்லாது அதிகரித்த நிலையிலேயே காணப்படுகின்றது.

நேற்று முன்தினம் கிடைக்கப் பெற்ற பி.சி.ஆர் பரிசோதனை முடிவின்படி 139 நபர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் நேற்று காலை கிடைத்த பி.சி.ஆர், அன்ரிஜென் பரிசோதனையில் 19 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழில் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை மொத்தமாக 4122 ஆக அதிகரித்துள்ளது. இன்று வரை 53 இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ் மாவட்டத்தில் 5கிராம அலுவலர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தன. அதில் ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்களில் மூன்று கிராமங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன.

நல்லூர் மற்றும் உடுவில் பிரதேச பிரிவுகளில் இரு கிராம சேவகர் பிரிவுகள் மாத்திரம் தற்போது தனிமைப்படுத்தப்பட்டு காணப்படுகின்றன.

யாழில் 2042 குடும்பங்களைச் சேர்ந்த 5712 நபர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். தற்போது கொரோனா நிலைமை அதிகரித்துச் செல்லும் போக்கு காணப்படுகின்றதே தவிர குறைந்ததாக இல்லை. எனவே பொதுமக்கள் மிகவும் அவதானமாக சுகாதார வழிமுறைகளை பின்பற்றி நடந்துகொள்ள வேண்டியதாக இருக்கின்றது.

அதே நேரத்தில் தொடர்ச்சியாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு 10,000 ரூபா உணவு பொதிகள் வழங்கப்படுகிறன. இவ்வருடம் 7588 குடும்பங்களுக்கும் கடந்த வருடம் 3526 பேருக்குமாக மொத்தமாக 11114 பேருக்கு உணவுப் பொதி வழங்கப்பட்டுள்ளது. 111 மில்லியன் ரூபா பெறுமதியான உணவுப்பொதி வழங்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் 5000 ரூபா விசேட கொடுப்பனவு சமுர்த்தி பெறும் குடும்பங்கள், வறிய குடும்பங்களுக்கான கொடுப்பனவாக அரசினால் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது

யாழில் தற்போது வரை 65120 குடும்பங்களுக்கு அது வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் மாற்றுத் திறனாளிகள், வயது முதிர்ந்தவர்கள், சிறுநீரகப் பாதிப்புள்ளவர்களுக்கு அடுத்த கட்டமாக இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அத்தோடு வருமானம் குறைந்து இருக்கும் குடும்பங்களுக்கும் இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் அத்தியாவசிய சேவைகள் மற்றும் ஏனைய பொது மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்ய வீடு வீடாகச் சென்று விற்பனை செய்வதற்குரிய அனுமதியை சம்பந்தப்பட்ட வியாபாரிகளுக்கு வழங்கி இருக்கின்றோம்.

அதேநேரத்தில் பொருட்கள் வீடுகளுக்குச் சென்று விநியோகிக்கின்றனர். தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பொதுமக்கள் தமக்குத் தேவையான உணவு வகைகளை வீடுகளில் இருந்தவாறே பெற்றுக்கொள்ள முடியும்.

அதே நேரத்தில் உணவு வகைகள் மீன், மரக்கறி போன்றவை நடமாடும் விற்பனை நிலையங்கள் மூலம் பொது மக்களுக்கு கிடைக்கக்கூடியதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதே போல விலை அதிகரித்தல், தரமற்ற பொருள் விற்பனை தொடர்பில் கிடைத்த முறைப்பாடுகளையடுத்து கடந்த ஒரு வார காலமாக பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு பிரதேசமாக சென்று நிலைமைகளை களப் பரிசோதனை செய்து வருகின்றார்கள். அதேபோல அவ்வாறான சட்டமீறலுக்கு உட்பட்ட வியாபாரிகள் எச்சரிக்கை செய்யப்படுவதோடு சிலருக்கு சட்ட நடவடிக்கையும் எடுத்திருக்கிறார்கள்.

குறிப்பாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள், எரிவாயு மற்றும் இதர உணவுப் பொருட்கள், ஏனைய பொருட்கள், மரக்கறி போன்றவற்றில் விலை அதிகரிப்பு அவதானத்துக்குட் படுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தற்போது களப் பரிசோதனை மேற்கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றார்கள். சில சட்டமீறல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.மேலும் இக்கட்டான காலகட்டம் என்பதனால் சகல அனுமதிகளும் வியா பாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. எனவே பொருள் தட்டுப்பாடு இல்லாதவாறு பொதுமக்களுக்கு பொருட்களை விநியோகிப்பதற்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே இந்த சந்தர்ப்பத்தை வியாபாரிகள் துஷ்பிரயோகம் செய்யாது பொதுமக்களுக்கு சேவையை முன்னெடுக்கவேண்டும்.

நடமாடும் சேவைக்கு என சில இடங்களில் அதிக தொகை அறவிடப்படுவதாகவும் சில இடங்களில் குறைவாக காணப்படுவதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

எனவே குறித்த விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் ஏமாற்றப்படாதவாறு வியாபாரிகளை பரிசோதனை செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தமது விளைபொருட்களை விற்பனை செய்வதில் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்குரிய தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல உள்ளூரிலும் அதனைக் கொள்வனவு செய்யக் கூடிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே பொதுமக்கள் அநாவசியமான பயணங்களை தவிர்த்து வீடுகளில் இருந்தவாறு தம்மை பாதுகாத்துக் கொள்ளவேண்டும். பயணத் தடை கட்டுப்பாடுகள் மக்களை தொற்றிலிருந்து கட்டுப்படுத்தவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே மக்கள் அதனை உணர்ந்து அதனை அனுசரித்து செயற்படவேண்டும் - என்றார். (அ-03)

# ஆடைத் தொழிற்சாலைக்கு சென்ற பஸ் மீது கல்வீச்சு!

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூன் 13

வவுனியா முருகனூர் பகுதியில் ஆடைத்தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச்சென்ற பஸ் மீது கல்வீச்சு தாக்குதலொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முருகனூர் பகுதியில் நேற்றுக் காலை 7.00 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிதம்பரபுரம் பகுதியிலிருந்து வவுனியா இராசேந்திர குளம் ஆடைத்தொழிற்சாலை நோக்கி ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் மீது, முருகனூர் விவசாயப் பண்ணைக்கு அருகே முகங்களை மறைந்தவாறு நின்ற இளைஞர் குழுவொன்று கல் வீச்சு தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

இதன்போது, சாரதி மீதும் தாக்குதலை மேற்கொண்ட குறித்த இளைஞர் குழு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

குறித்த பஸ்ஸின் அனைத்து கண்ணாடிகளும் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன் சாரதி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தின் போது ஊழியர்கள் எவருக்கும் பாரிய அளவில் காயங்கள் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆடைத் தொழிற்சாலையில் இருந்து கொரோனா தொற்று பரவுவதாக வடக்கு மாகாணத்தில் பல பகுதிகளில் எதிர்ப்புக்கள் வெளியாகிவரும் நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸார் குற்றத் தடுப்புப் பிரிவினரின் உதவியுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# நானுஓயா சுகாதார பிரிவில் மேலும் 24 பேருக்கு தொற்று

கொழும்பு, ஜூன் 13

நுவரெலியா மாவட்டத்தில் நேற்று முன் தினம் மேலும் 45 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நானுஓயா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 24 பேருக்கும், டயகம சுகாதார வைத்திய அதிகாரி பிவில் 17 பேருக்கும், நுவரெலியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நால்வருக்கும் இவ்வாறு வைரஸ் தொற்றியுள்ளது. (அ)

# நீர்கொழும்பு கடல் நீரேரியில் மீன்பிடி தொழிலுக்கு அனுமதி!

கொழும்பு, ஜூன் 13

'எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீவிபத்தையடுத்து நீர்கொழும்பு கடல் நீரேரிப் பகுதியில் மீன்பிடித் தொழிலுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு கடல் நீரேரி பகுதியில் நேற்று முதல் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

# பேர்ள் கப்பல் விபத்தால் பாதிக்கப்பட்ட கடற்பகுதி ஆய்வுக்கு பின் மீன்பிடி மேற்கொள்ள நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 13

விபத்திற்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதுள்ள பாணந்துறை முதல் நீர்கொழும்பு வரையான கடற்பகுதியில் முறையான ஆய்வுக்கு பின்னர் விரைவாக மீன்பிடி நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சுற்றுச்சூழல், மீன்வளம், பொருளாதாரம் உள்ளிட்ட துறைகளில் கவனம் செலுத்தி, கப்பல் தீயினால் ஏற்பட்ட சேதங்களை முழுமையாக மதிப்பிடவும், சம்பந்தப்பட்ட கப்பல் நிறுவனத்திடமிருந்து முழு இழப்பீட்டைப் பெறுவதற்கும், கப்பலை வெளியேற்றுவதற்கு தேவையான சட்ட நடவடிக்



கைகளை விரைவுபடுத்தவும் பிரதமர் இதன்போது அறிவுறுத்தினார்.

சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் தலைமையில் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் அறிவித்தார்.

கொவிட் தொற்று நிலைமை காரணமாக குறைந்த வருமானம் பெறுவோருக்கு வழங்கப்படும் 5000 ரூபா கொடுப்பனவை கப்பல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மீனவ சமூகத்தினருக்கும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழங்கப்படும் எனவும் பிரதமர் இதன்போது தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, மஹிந்த அமரவீர, ரோஹித அபேகுணவர்தன, அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர்களான கஞ்சன விஜேசேகர, நாலக கொடஹேவ மற்றும் பிரதமரின் செயலாளர் காமினி செனரத், சட்டமா அதிபர் சஞ்சே ராஜரட்ணம், கடற் படைத் தளபதி வைஸ் அட் மிரல் நிசாந்த உலுகேதென்ன, சுற்றாடல்துறை அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேரா, துறைமுகங் கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் யூ.டீ.சீ.ஜயலால், இலங்கை துறை முக அதிகார சபையின் தலைவர் தயா ரத்நாயக்க, தேசிய சமுத்திர பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் தர்ஷனி லஹந்தபுர, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் சிறிபால அமரசிங்க உள்ளிட்ட அரச நிறுவனங்கள் பலவற்றின் தலைவர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (அ)

# பயணத் தடையை கடுமையாக்குங்கள்!

## மருத்துவ நிபுணர்கள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 13

**நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகளை கடுமையாக்கும்படி இலங்கை மருத்துவ நிபுணர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

சங்கத்தின் தலைவர் வைத்தியர் லக்குமார் பெர்னாண்டோ, கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்படாவிட்டால், தினசரி நோய்த் தொற்றுகள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை குறைவடையுமென எதிர்பார்க்க முடியாது என்றார்.

ஒரு நிறுவனம், அலுவலகங்களுக்கு ஒரு குறிப்பிட்ட நாளில் வரவழைக்கக்கூடிய ஊழியர்களின் எண்ணிக்கையில் மேலும் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும், வீதிகளில் சுற்றும் நபர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும், உணவு மற்றும் பிற அத்தியாவசிய விநியோக சேவைகளை விரிவுபடுத்தவும் பெர்னாண்டோ முன்மொழிந்துள்ளார்.

தொற்று வீதத்தைக் குறைப்பதில் பொதுமக்களின் ஆதரவும் மிக முக்கியமானது என்றும் அவர் கூறினார்.

# பொருளாதார மத்திய நிலையங்கள் கட்டுப்பாடுகளுடன் திறக்கப்பட்டன



கொழும்பு, ஜூன் 13

நாட்டிலுள்ள பொருளாதார மத்திய நிலையங்கள் அனைத்தையும் மொத்த விற்பனைக்காக நேற்றும் இன்றும் திறக்கப்படவுள்ளன.

குறித்த நாட்களில் மொத்த விற்பனையாளர்கள் மற்றும் நடமாடும் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் நேரடியாக பொருளாதார மத்திய நிலையங்களுக்கு சென்று, மரக்கறிகள் மற்றும் பழ வகைகளை கொள்வனவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுகாதார நடைமுறைகளை பின்பற்றியே வாராந்த சந்தைகள் திறக்கப்படும் என்பதுடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவினரை மாத்திரம் அனுமதிக்க முடியும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத் தடை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளமையை தொடர்ந்தே பொருளாதார மத்திய நிலையங்களை திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்கினார் சுமந்திரன்



யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணம்-கந்தர்மடம், அரசடிப் பகுதியில் தனிமைப் படுத் தப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகளை பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வழங்கினார்.

இந்த நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் உட்பட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கட்சியின் உறுப் பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர். (அ)

# எரிபொருள் விலையை குறைக்க வலியுறுத்தும் தொழிற்சங்கங்கள்!

கொழும்பு, ஜூன் 13

எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு பதிலாக எரிபொருளுக்கு விதிக்கப்படும் வரியைக் குறைக்குமாறு தொழிற்சங்கங்கள் அரசாங்கத்திடம் கோரியுள்ளன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின், ஐக்கிய ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆனந்த பாலித இது தொடர்பில் குறிப்பிடுகையில்-

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை 2019 முதல் பல சந்தர்ப்பங்களில் குறைந்துவிட்டாலும், உள்நாட்டில் விலைகளை அரசாங்கம் குறைக்கவில்லை.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து சர்வதேச சந்தையில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் 68 அமெரிக்க டொலரிலிருந்து 18 அமெரிக்க டொலராகக் குறைக்கப்பட்டதாக பாலித கூறுகிறார்.

இருப்பினும், துளி சலுகையை பொதுமக்கள் பெறவில்லை என்று அவர் வலியுறுத்தினார்.

முன்னாள் எரிசக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர முன்னர் குறிப்பிடுகையில்-

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இலாபத்தின் மூலம், பொதுமக்களிற்கான ரின் மீன், பருப்பு சலுகைகளை வழங்கவுள்ளதாக தெரிவித்திருந்தார். சலுகை இரண்டு வாரங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனாலும் இப்பொழுது விலை நான்கு மடங்கு அதிகரித்ததாக ஆனந்த பாலித கூறினார்.

# பயணக்கட்டுப்பாடு நீடிப்பை வரவேற்கும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம்

கொழும்பு, ஜூன் 13

நாட்டில் கொரோனா தொற்றை கட்டுப்படுத்த பயணக் கட்டுப்பாடுகளை நீடிக்க அரசாங்கம் எடுத்துள்ள முடிவை வரவேற்பதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அச்சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண, போக்குவரத்து கட்டுப்பாடுகளை கடுமையாக அமுல்படுத்துவது அவசியம் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும் பயணக் கட்டுப்பாடுகளின் போது அத்தியாவசிய உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் விற்பனையாளர்களின் உடல்நலம் குறித்து அரசாங்கம் மேலதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (அ)

# தடுப்பூசி இறக்குமதிக்காக 77 பில்லியன் ரூபா தேவை

கொழும்பு, ஜூன் 13

கொரோனா தடுப்பூசி இறக்குமதிக்காக இலங்கைக்கு 77 பில்லியன் ரூபா தேவைப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பிரசன்ன குணசேன இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பா மற்றும் அமெரிக்கா என்பன 2022, 2023ஆம் ஆண்டுகளுக்கான கொரோனா தடுப்பூசிக்கான முன்பதிவுகளை தற்போதே முன்னெடுத்துள்ளன.

இந்நிலையில் கொரோனா தடுப்பூசிகள் பல கட்டங்களாக செலுத்தப்பட வேண்டுமென அந்த நாடுகள் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அவசர சிகிச்சைப் பிரிவுக்கு கட்டில்கள் இராஜாங்க அமைச்சரால் கையளிப்பு!

மட்டக்களப்பு, ஜூன் 13

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவு இல்லாத காரணத்தினால் இன்று சில நாட்களில் அதிதீவிர சிகிச்சை பிரிவு அமைப்பதற்கு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டு வரும் கொரோனா அவசர சிகிச்சைப் பிரிவிற்கு நோயாளிகள் கட்டில்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் வைத்தியட்சகர் பி.கேதீஸ்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார திணைக்களத்தின் தகவல் பிரிவு பொறுப்பாளர் வைத்தியர் இ.நவலோஜிதன், வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொறியிலாளர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளையின் தலைவர் பொறியியலாளர் ரி.பத்மராஜா, பொறியியலாளர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொறியியலாளர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளையினால் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான பத்து நோயாளிகள் கட்டில்கள் கையளிக்கப்பட்டன.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சை விடுதி ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது அவசர சிகிச்சைப் பிரிவு ஆரம்பிப்பதற்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தடுப்பூசி திட்டத்தில் முறைகேடு: விசாரணை நடத்துமாறு கோரிக்கை

கொழும்பு, ஜூன் 13

கொரோனா தடுப்பூசி திட்டத்தில் காணப்படும் முறைகேடுகள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்குமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தனவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளதாக அச்சங்கத்தின் செயலாளர் ஷெனால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை சுமார் 800 முதல் ஆயிரம் தடுப்பூசிகள் வீணடிக்கப்பட்டமை ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள தாகவும் அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தடுப்பூசியின் அளவு தவறாக கையாளப்பட்டதன் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டதாகவும் இந்த விடயத்தில் தொழில்நுட்ப ரீதியான வழிகாட்டல்கள் தவறான முறையில் வழங்கப்பட்டுள்ளதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

# கொவிட் தடுப்பூயை பெற்ற 22 பேருக்கு மீண்டும் அறிகுறி!

கொழும்பு, ஜூன் 13

கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட பின்னரும், நோய் அறிகுறிகள் காட்டிய 22 பேர் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சினோபார்ம் தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்களே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர் என அனுராதபுரம் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போது காணப்படும் எந்தவொரு கொரோனா தடுப்பூசியும் வாழ்நாள் முழுவதும் நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் என உத்தரவாதம் வழங்க முடியாது என பேராசிரியர் அர்ஜுன டி சில்வா கூறியுள்ளார்.

மேலும், இரண்டு கொரோனா தடுப்பூசிகளையும் பெற்ற ஒருவருக்கு குறைந்த பட்சம் ஒரு வருடம் வரை நோய் எதிர்ப்பு சக்தி காணப்படும் என கருதப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

மாலி

## செய்தியின் பின்னணியில்...



# உடுப்பிட்டி சிங்கம்!

## மக்கள் ஆளுமைபெற்ற கடைசி தமிழ்த் தலைவர்

இப்படி ஓர் ஆரூடத்தை எவருமே சொன்னதில்லை.

கவர்ச்சிமிக்க பிரத மரான சிறிமாவோ பண்டா ரநாயக்கவின் சிறிலங்கா சுதந்திர கட்சி பாராளு மன்றத்தில் எட்டு ஆசனங் களை மட்டுமே வென்றது.

எதிர்க்கட்சித் தலைவர் பிரதம ராவதும், பிரதமர் எதிர்க்கட்சித் தலை வராவதும்தானே சொல்லப் படும் சோதிடம்.

அதுவும், தனிநாடு கோரிக் கையுடன் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி, 18 ஆசனங்களுடன் பாராளுமன்றத்தில் இரண்டாவது பெரிய கட்சியாகியது. இலங்கை அரசியலில் முன்னெப்போதுமில்லாத விசேஷங்கள் 1977 பொதுத் தேர்தல் முடிவுகளில் ஏற்பட்டன. கிழநரியான ஜே. ஆர். ஜயவர்த்தன, 5/6 பெரும்பான்மையுடன் முதன் முதலாக பிரதமரானார். 'தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட மனத் தாங்கல்களில் அவர்கள் தனிநாடு கோரும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். எமது கட்சி ஆட்சிக்கு வந்ததும், சர்வ கட்சி மாநாட்டின் மூலம் இப் பிரச்னைக்கு தீர்வு காணப்படும்' என்று, ஐக்கிய தேசிய கட்சி அதன் தேர்தல் விஞ்ஞா பனத்தில் கூறியிருந்தது. இந்த மக்களாணையுடன் ஆட்சிக்கு வந்த அரசில், தனி நாடொன்றை அமைக்கும் மக்களாணையுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி, எதிர்க்கட்சித் தலைவர் ஆசனத்தில் அமரப் போகிறது. மிகப்பெரும் அரசியல் கயிறிழுத்தல் ஒன்றுக்கான முஸ்தீபு களில், தமிழர் விடுதலைக் கூட்டணியில் இக் கயிறிழுத்தலுக்கு தலைமைதாங்க மிகவும் ஏற்றவர் அமிர்தலிங்கமா அல்லது சிவசிதம் பரமா? தனிப்பட்ட விதங்களிலல்லாமல், கட்சிக்கு உள்ளேயும் வெளி யேயும் சிலரிடையே இக் கேள்வி மிகுந்த அக்கறையுடன் எழுந்தது.

பாராளுமன்றத்தில் ஜே. ஆர். ஜயவர்த்தனவையே எதிர்க்கட்சித் தலைவராக பார்த்த அநுபவத்தில், அவரே அப் பதவிக்கான ஒரு 'மாதிரி'யாக (Model) என்னுள் தெரிந்தார். அந்த 'மாதிரி'யாக, அப் போது அமிர்தலிங்கத்தைவிட சிவசிதம்பரம் எனக்குத் தெரிந்தார்.

திருநெல்வேலியில் அவர் தங்கியிருந்த இல்லத்துக்கு சென்று, இதனை சூசகமாக அவரிடம் வெளிப்படுத்தினேன். 'இல்லை தம்பி. அது அமிர்தான். அதில் கேள்விக்கோ, ஐயத்துக்கோ இடமில்லை'. - எள்ளளவு சலனமுமின்றி, முழு திடத்தோடு சொன்னார் சிவசிதம்பரம்.

இடதுசாரி கொள்கைகளின் ஈடுபாட்டில், இளமையில், கம்யூனி சவாதியான பொன். கந்தையாவுக்கு ஆதரவாகவிருந்தவர், சுயேச்சை வேட்பாளராக 1956 பொதுத் தேர்தலில் பருத்தித்துறை தொகுதி யில் தோல்வியுற்றார். ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் அகில இலங்கை தமிழ் காங்கிரசில் தன்னை இணைத்துக்கொண்டு, 1960 பொதுத் தேர்த லில், புதிதாக உருவான உடுப்பிட்டி தொகுதியில் போட்டியிட்டு வென்றார்.

தமிழ் காங்கிரஸ் காரராகவே அவர் அடையாளம் பெற்றாலும், மு. சிவசிதம்பரம் ஒருபோதுமே கட்சி அரசியல் செய்தவர் அல்லர். தமிழ் மக்கள் கட்சி அவருடைய கட்சி. தமிழரசு கட்சி நடாத்திய சத்தி யாக்கிரகத்தில் - தபால் சட்டத்தை மீறிய சட்ட மறுப்பு நடவடிக் கையாக, தபால் விநியோகம் செய்தவர்.

மேயர் துரையப்பா கொலைவழக்கு முதல், குட்டிமணி, தங்கத் துரை வழக்கு முதலான அனைத்து வழக்குகளிலும் ஆஜரானவர். சிறந்த குற்றவியல் வழக்கறிஞர். ஆஜானுபாகுவான தோற்றமுடைய அவர், இந்த வழக்குகளில் மிகுந்த ஆக்ரோஷத்துடனேயே வாதிடு வார். பொலிசாருக்கு சிம்ம சொப்பனமாக தெரிவார்.

அமிர்தலிங்கம்தான் எதிர்க்கட்சித் தலைவரா னார். ஆனால், அவரின் தீரமிக்க தளபதி சிவசிதம் பரம். பாராளுமன்றத்தில் எப்போதும் அமிர்தலிங் கத்தின் பக்கத்தில் அவர் இருப்பார். அது அமிர்த லிங்கத்தின் பெரும் கவசம். பெரும் வீரியம்.

விவாதத் திறனில் - குறுக்கீடுகளுக்கு பதிலடி கொடுப்பதில், மு. சிவசிதம்பரம் அசகாய சூரர். 'இரட்டைக் குழல் பீரங்கி' என்றுதான் இவரையும் அமிர்தலிங்கத்தையும் மனதார்ந்து குறிப்பிட்டுச் சொல்வார் ஐ. தே. க. வின் மற்றொரு பீரங்கியான லலித் அத்துலத்முதலி.

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சரான சிறில் மத்தியூ, இனவாதத்துக்கான அமைச்சர் போலவுமிருந்தார். 'பிங்' அல் லது நீல கலர் பைலுடன் அவர் சபைக்குள் நுழைந்தால், அது ஒரு சண்டமாருதத்துக்கான 'வானிலை அறிவிப்பு'. அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் இரு வரும் ஒருவரையொருவர் பார்த்து, சிரிப்பும் சினமும் கொள்வார்கள். பெரும்பாலும், சண்டமாருதம் சுழித்தடித்தார்த்துத்தான் ஓயும்.

உயர்தர பரீட்சை வினாத்தாள்கள் திருத்து வதில் தமிழ் ஆசிரியர்கள் ஏமாற்றுக்காரர்கள் என்று பகிரங்கமாக குற்றஞ்சாட்டியவர் சிறில் மத்தியூ.

இந்த குற்றச்சாட்டை பாராளுமன்றத்தில் வன்மையாக வாதிட்டு, நிர்மூலமாக்கியவர் சிவ சிதம்பரம். உண்மையில், கல்வி சமூகமும் தமிழ் சமூகமும் பெரு நன்றியோடு என்றும் நினைவில் கொள்ளவேண்டியது இது.

சிறந்த வழக்கறிஞரும் பாராளுமன்ற வாதியு மான சிவசிதம்பரத்தின் வாதங்கள் நீதிமன்றத்திலும் சரி, பாராளுமன்றத்திலும்சரி எப்போதும் கனகச்சித மாக இருக்கும். காஷியமான குறுக்கீடுகளும் செய்வார். குழந்தைகளின் போஷாக்கில் தாய்ப்பா லின் அவசியத்தையும் நன்மையையும் அமைச்சர் ஒரு வர் பேசிக்கொண்டிருந்தார். சிவசிதம்பரம் குறுக் கிட்டு, 'அழகான கொள்கலனிலிருந்துகூட கிடைக்கிறது' என்றார்!

பட்ஜட் விவாதம் ஒன்றில், நாட்டில் கஜூ உற் பத்தியை பெருக்கவல்ல முறைகள்பற்றி பருத்தித் துறை எம். பி. துரைரத்தினம் விரிவாக பேசிக்கொண் டிருந்தார். 'இதுகளையெல்லாம் இவங்களுக்கு ஏன் சொல்லிக்கொண்டிருக்கிறாய்?' - அருகிலிருந்த சிவசிதம்பரத்தின் மெதுவான குரல், 'இயர்போ னில்' எங்கள் காதுகளில் கேட்டது. (நிச்சயமாக, தமிழ் பேச்சு மொழிபெயர்ப்பாளர்கள் அதனை சிங்களத்திலோ ஆங்கிலத்திலோ மொழி பெயர்த்திருக்கமாட்டார்கள்.)

அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் சிவசிதம் பரம் மிகுந்த விரக்திகொண்டிருந்தார். அரசுடன் மாவட்ட அபிவிருத்தி சபைகள் தொடர்பிலான தொடர் ஆலோசனைகள் வெள்ளிக்கிழமை மாலைகளில் கொழும்பில் நடைபெற்றன. கூட் டம் முடிந்ததும், பொதுவாக அமிர்தலிங்கத்தை தொடர்புகொண்டே தகவல்களைப் பெறுவது வழக்கம். ஒருமுறை, கூட்டத்தை முடித்துக்கொண்டு அமிர்தலிங்கம் இரவு தபால் புகையிரதத்தில் யாழ்ப்பாணத்துக்கு கிளம்பிவிட்டார். சிவசிதம் பரத்துடன் தொடர்புகொண்டு விபரங்களைத் தெரிந்த பின்னர், யார்யார் இன்று கலந்துகொண் டீர்கள் என்று கேட்டபோது, 'அதுதான் தம்பி, இந்த வழக்கமாக போகிற முட்டாள்கள்தான்' என்று சொன்னார். இது வெளிப்படுத்தியவை அநந்தம்.

மாவட்ட அபிவிருத்தி சபைதான் அமிர்தலிங் கத்தின் அரசியல் நடவடிக்கைகளில் அவருக்கு பெரும் சவாலாகியது. ஆனால், உண்மையில் அவரை அந்த சவாலுக்குள் தள்ளிவிட்டவர்கள், தாங்கள் 'நல்லபிள்ளைகளானார்கள்'.

டட்லி சேனநாயக்க அரசாங்கத்தில் (1965 - 1970) சிவசிதம்பரம் துணை சபாநாயகராக பதவிவகித்தார். ஷேர்ளி கொரியா சபாநாயகர். ஜே. ஆர். அரசாங்கத்தில் ஆனந்த திஸ்ஸ டி அல் விஸ் சபாநாயகராகவிருந்தபோது, சிவசிதம்பரம் பேசிக்கொண்டிருந்தார். ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் குறுக்கிட்டு, 'நீங்களும் அந்த ஆற்றலில் சிறந்தவர்' என்றார். உடனே சிவசிதம்பரம், 'உங்கள் இடது கை பாராட்டுக்கு நன்றி' என்றார்!

சிவசிதம்பரத்தின் சிம்ம குரலிலும் தோற்றத்திலும் 'உடுப்பிட்டி சிங்கம்' என்று அவர் அழைக்கப்பட்டார். தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரசும் இணைந்த தமிழர் விடுதலைக் கூட்டணி 77 தேர்தலில் போட்டியிட்டபோது, 1970 தேர்தலில் ஒவ்வொரு கட்சியும் வென்ற தொகுதிகளை அவ்வக் கட்சிக்கு வழங்குவது என்று, வேட்பாளர் நியமனத்துக்கு ஒரு 'சூத் திரத்தை'க் கண்டதில், தமிழ் காங்கிரசின் நல்லூர் தொகுதி மு. சிவசிதம்பரத்துக்கு வழங்கப்பட்டது. 1970 தேர்தலில் தமிழ் காங்கிரசின் சி. அருளம் பலம் நல்லூர் தொகுதியில் வெற்றிபெற்று, பின் னர் சிறிலங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்து கொண்டார்.

அமிர்தலிங்கமும் மு. சிவசிதம்பரமும் 1970 தேர்தலில் தோல்வியுற்றிருந்தனர். வட்டுக் கோட்டை தொகுதியில் அமிர்தலிங்கத்தை தோற்கடித்த தமிழ் காங்கிரசின் ஆ. தியாக ராசாவும் பின்னர் சிறிலங்கா சுதந்திர கட்சியில் இணைந் தார். எனின், அத் தொகுதி தமிழ் காங்கிரசின் குமார் பொன்னம்பலத்துக்கு வழங்கப் பட்டது. குமார் பொன்னம்பலம் அதனை ஏற்க மறுத்து, தந்தையார் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் முன்னைய யாழ்ப்பாணம் தொகுதியைக் கோரி னார். ஆனால், 1970 தேர்தலில் ஜீ. ஜீ. பொன்னம் பலத்தை தோற்கடித்து, தமிழரசு கட்சியின் சி. எக்ஸ். மாட்டின் யாழ்ப்பாண தொகுதியில் வெற்றிபெற் றிருந்தார். (குடியரசு அரசியல மைப்பை ஆதரித்ததில் மாட்டின் பின்னர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்.) ஆக, ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத் தின்படி, தமிழர சுக் கட்சிக்குரிய யாழ்ப்பாண தொகுதி வெ. யோகேஸ் வரனுக்கு வழங்கப்பட் டது. மறைந்த எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் காங்கேசன்துறை தொகுதியில் அமிர்தலிங்கம் போட்டியிட்டார்.

இலங்கை முழுவதிலும் அதி கூடிய பெரும்பான் மையைப் பெற்றவராக சிவசிதம்பரம் நல்லூர் தொகுதியில் வெற்றிபெற்றார்.

அரசியலில் எதிரும் புதிருமாக இருந்தவர்கள் தான். ஆனால், சிவசிதம்பரம் உயர்ந்த பண்பாளர். சிறப்பான குணாம்சங்கள் கொண்டவர். 'பூவோடு வருவார், பொட்டோடு வருவார், வட்டுக்கோட்டை அக்கா' என்று, அந் நாள்களில் தமிழ் காங்கிரஸ் மேடைகளில் மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத் தைக் குறித்து காங்கிரஸ்காரர்கள் பேசுவதுண்டு. ஆனால், மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தைப்பற்றி பாராளுமன்றத்தில் காமினி திசாநாயக்க ஏதோ பேசிவிட்டதற்காக வெகுண்டெழுந்த சிவசிதம்பரம், அரசாங்கத்தையே பின்னர் வெட்கித் தலைகுனிய வைத்தார். இனத்துக்கு, காலத்தில் அவசியமாகிய ஓர் ஒற் றுமையை கடைசிவரை உணர்த்தி நின்றவர் எம். சிவா. அமிர்தலிங்கம் சுடப்பட்டவேளையிலும் அவருடன் அருகிருந்து, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக் கானார்.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் அமிர்த லிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அமைச்சர் காமினி திசாநாயக்க, மிகச் சிறந்த ஓர் இரங்கல் உரை ஆற்றி னார். 'பல்லாயிரம் மக்கள், இவர்கள் இருவரின தும் பேச்சைக் கேட்ட இந்த மைதானத்தில் நான் பேசுகிறேன் அவர்கள் இன்று மௌனமாக இருக் கிறார்கள். ஆனால், அவர்களின் இந்த மௌனம், அவர்கள் பேசியிருக்கக்கூடிய எல்லாவற்றையும் விட மேலாக கேட்கும்.'

யாருக்கு கேட்கிறதோ, ஆனால் அவர்களைத் தொடரும் அரசியல்வாதிகளுக்கு அது நிச்சயமாக கேட்கவில்லை.

எம். சிவாவை பிற்காலங்களில் ஒருமுறை சென்னை, அடையாறில் பார்த்தேன். முதுமையில், கூடவே அவரது துணைவியாரும் அங்கு இருந்தார். ஆனால், அதன்பிறகு ஹவ்லொக் ரவுணில் கூட்டணி அலுவலகத்திலேயே ஒரு சிறு அறையில் அவர் வதிந்தார். 'இரவுக்கு என்ன சாப்பாடு வாங்குவோம்.....?' - அங்கிருந்தவரை அவர் கேட்டது, கேட்பதற்கு கஷ்டமாகவிருந்தது.

ஆனந்தசங்கரி அவரை பரிவோடு கவனித்தார்.

ஆக, சுதந்திரத்துக்குப் பின்னர், மக்கள் ஆளுமைபெற்ற தமிழ் அரசியல் தலைவர்களில் கடைசியானவர் எம். சிவசிதம்பரம். அவருடைய 19ஆவது நினைவுதினம் ஜூன் 5ஆம் திகதி வந்துபோனது.

ஈழநாடு



# சிறை வாழ்க்கையில் 30 ஆண்டுகள்! பேரறிவாளனுக்கு விடுதலை எப்போது?



**“இனிமேல் என் மகன் சிறைக்குப் போகக் கூடாது. 30 ஆண்டுகள்ன்றது, எவ்ளோ பெரிய நீண்ட சிறை தண்டனைங்கிறத உணர்ந்த தாயாக நான் சொல்கிறேன் - நீங்க (முதல்வர்) இதுக்கு மேல என் மகனை சிறைக்கு அனுப்பாம பாத்துக்கணும். என் பையன் நிரபராதினு அதிகாரி தியாகராஜன், நீதிபதி கே.டி. தாமஸ், நீதியரசர் கிருஷ்ணய்யர்னு நிறைய பேர் குரல் கொடுத்தாங்க் மக்கள் ஆதரவு தெரிவிச்சாங்க. ஆனா, என் மகனுக்கு இன்னும் வெளியுலக வாழ்க்கை கிட்டல. இழந்ததெல்லாம் யாராலயும் திருப்பித் தர முடியாது. இந்த வயசான காலத்துயாவது எங்க புள்ள எங்களோட இருக்கணும்ங்கிற கோரிக்கைய அரசுக்கு வைக்கிறேன்”**

**- மு.க.ஸ்டாலினிடம் மன்றாடும் அற்புதம்மாள்**

- அருண் பிரசாத்

பேரறிவாளனின் சமீபத்திய பரோலைத் தொடர்ந்து, அவர் சிறைவாசம் 31ஆவது ஆண்டை எட்டியிருக்கும் இந்தச் சூழலில், அவரது நிரந்தர விடுதலைக்கான குரல்கள் மேலும் வலுப்பெற்றிருக்கின்றன.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி, சென்னை மத்திய சிறையில் ஆயுள் தண்டனைக் கைதியாகச் சிறைவாசம் அனுபவித்துவரும் பேரறிவாளன், இவ்வழக்கில் விசாரணைக்காக கைது செய்யப்பட்டு 30 ஆண்டுகள் இரண்டு தினங்களுக்கு முன்னர் நிறைவடைந்திருக்கின்றன.

ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாக பேரறிவாளனிடம் விசாரணை நடத்த வேண்டும், விசாரணை முடிந்து நாளை காலை அனுப்பி வைக்கப்பட்டுவிடுவார் என்று, 30 ஆண்டுகளுாக்கு முன்பு அதாவது, 1991 ஜூன் 11 அன்று இரவு சி.பி.ஐ-யின் சிறப்புப் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் பேரறிவாளனின் பெற்றோரிடம் கூறி அழைத்துச்சென்றிருக்கிறார்கள். தங்கள் மகன் எந்தத் தவறும் செய்யவில்லை என்பதால், அதிகாரிகளின் கூற்றை நம்பி, பேரறிவாளனை விசாரணைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால், தங்கள் மகன் நாளை காலை திரும்பப் போவதில்லை என்பதை அப்போது அவர்கள் அறிந்திருக்கவில்லை!

19 வயதில் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்ட பேரறிவாளன், இன்று 50 வயதை நெருங்கி விட்டார். திரும்பப் பெறமுடியாத தன்னுடைய இளமையை ஒட்டு மொத்தமாக இழந்து, இதுவரையிலான தன்னுடைய வாழ்நாளில் பாதிக்கும் மேலான காலத்தைச் சிறையில் கழித்திருக்கிறார். கடும் மன அழுத்தத்தோடு, நீரிழிவு நோய், சிறுநீரகத் தொற்று போன்ற உடல்நலப் பிரச்னைகளையும் எதிர்கொண்டு வருகிறார்.

பேரறிவாளன் விடுதலை கோரும் மனு மீதான விசாரணை தற்போது உச்ச நீதிமன்றத்தில் உள்ளது. நாடு முழுவதும் கொரோனா இரண்டாவது அலை பரவத் தொடங்கியபோது, சிறைவாசிகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையிலான உத்தரவுகளை உச்ச நீதிமன்றம் பிறப்பித்திருந்தது. இந்தப் பின்னணியில், நீரிழிவு மற்றும் சிறுநீரக நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள தன்னுடைய மகன் பேரறிவாளனின் உடல்நிலை மற்றும் கொரோனா பரவலைக் கருத்தில் கொண்டு, அவருக்கு நீண்ட விடுப்பு வழங்கிட வேண்டும் என, அவரது தாயார் அற்புதம்மாள் மே 18 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்குக் கோரிக்கை விடுத்திருந்தார். அவரது கோரிக்கையை ஏற்று, உரிய விதிகளைத் தளர்த்தி, 30 நாள்கள் சாதாரண விடுப்பு வழங்கி முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவிட்டார்.

பேரறிவாளனின் சமீபத்திய பரோலைத் தொடர்ந்து, அவர் சிறைவாசம் 31ஆவது ஆண்டை எட்டியிருக்கும் இந்தச் சூழலில், அவரது நிரந்தர விடுதலைக்கான குரல்கள் மேலும் வலுப்பெற்றிருக்கின்றன. இந்தப் பின்னணியில், பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் காணொளி ஒன்றை நேற்று முன்தினம் வெளியிட்டிருக்கிறார் அதில் அவர் பேசியிருப்பதாவது...

”சிறை வாழ்க்கையையே அவன் பயனுள்ளதா பயன்படுத்திக் கொண்டான். அவன் மட்டுமே படிக்காமல், சிறைவாசிகள் நிறைய பேருக்குப் படிப்பறிவு கொடுத்தான். இருந்தாலும் அவன் சுதந்திரமா வாழக்கூடிய வாழ்க்கை







இல்லைங்கிறதுதான் எனக்குக் கவலையா இருக்கு. என் மகனோட இளமை, நிம்மதி எல்லாம் இந்த 30 ஆண்டுகள் சிறை வாழ்க்கையில் போயிடுச்சு ஒட்டுமொத்தமா குடும்பத்தின் நிம்மதியே போச்சு.

இந்த முப்பது ஆண்டு சிறை வாழ்க்கை என் மகனுக்குப் பலவித நோய்களைக் கொடுத்திருக்கு. அதுக்கு தொடர் மருத்துவம் அவனுக்குக் கிடைக்கல. நான் எவ்வளவோ முயற்சி பண்ணேன். சில மருத்துவம் அவனுக்கு அப்பப்போ கிடைச்சது. ஆனால், தொடர்ந்து மருத்துவம் பார்க்க முடியாம போச்சு. அதனால் தொடர்ந்து அவன் உடல் நிலை பாதிக்கப்படுது.

இந்த நிலையில உலகத்தையே அச்சுறுத்துற கொரோனா வந்தது. உடல்நலமில்லாத என் மகனுக்கு அதைத் தாங்குற சக்தி இல்லயேனு தவிச்சிட்டு இருந்தேன். உச்ச நீதிமன்றமே சிறைவாசிகளைக் குறைக்கணும்னு சொன்னப்போ மகிழ்ச்சி அடைஞ்சேன். உடனே அரசுக்கு விண்ணப்பிச்சேன். தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் அவர்கள் என் கோரிக்கையை ஏத்துக்கிட்டாங்க. என் மகனோட உடல் நிலையை கவனிக்க வேண்டியது அவசியமா இருக்கு. தொடர்ந்து மருத்துவ சிகிச்சை தேவையா இருக்கு.

இனிமேல் என் மகன் சிறைக்குப் போகக் கூடாது. 30 ஆண்டுகள்ன்றது, எவ்ளோ பெரிய நீண்ட சிறை தண்டனைங்கிறத உணர்ந்த தாயாக நான் சொல்கிறேன் - நீங்க (முதல்வர்) இதுக்கு மேல என் மகனை சிறைக்கு அனுப்பாம பாத்துக்கணும். என் பையன் நிரபராதினு அதிகாரி தியாக ராஜன், நீதிபதி கே.டி. தாமஸ், நீதிய ரசர் கிருஷ்ணய்யர்னு நிறைய பேர் குரல் கொடுத்தாங்க் மக்கள் ஆதரவு தெரிவிச் சாங்க. ஆனா, என் மகனுக்கு இன்னும் வெளியுலக வாழ்க்கை கிட்டல. இழந்த தெல்லாம் யாராலயும் திருப்பித் தர முடியாது. இந்த வயசான காலத்துயாவது எங்க புள்ள எங்களோட இருக் கணும்ங்கிற கோரிக்கைய அரசுக்கு வைக்கிறேன்”
- அற்புதம்மாளின் குரலில் காலங்களை மீறிய வேதனையின் கனம்.

எழுவர் விடுதலை தொடர்பாக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி, அரசுத் தலைமை வழக்கறிஞர் சண்முகசுந்தரம் ஆகியோருடன் கடந்த மாதம் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனையில் ஈடுபட்டிருந்தார். எழுவர் விடுதலை தொடர்பாகச் சட்டப்பேரவையில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றுவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாக அப்போது தகவல்கள் வெளியான நிலையில், அதிகாரப்பூர்வமாக எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை. ■




# கொரோனா ஆபத்திலிருந்து மீள்வதற்கு சமூகத் தடுப்பாற்றல்தான் ஒரே வழியா?

கொரோனா வைரஸலிருந்து தப்பிப்பதற்கு 'சமூகத் தடுப்பாற்றல்'தான் (herd immunity) முக்கியமான வழி என்றே சொல்லப்பட்டு வரு கிறது. போதுமான அளவு மக்களுக்குத் தடுப்பூசி போட் டால் - அதாவது 60%- லிருந்து 70% வரையிலான மக்களுக்கு - வைரஸால் அதற்கு மேல் பரவ முடியாமல் போகலாம் என்று சொல்லப்பட்டது.

ஆனால், பெருந்தொற்றிலிருந்து முற்றிலும் விடுபட முடியும் என்ற நம்பிக்கை சமீபத்தில் குறைந்துள்ளது. "சமூகத் தடுப்பாற்றலுக்கான எல்லையை எட்ட முடியாது என்ற கருத்தொற்றுமை அறிவியலர்களிடமும் பொதுச் சுகாதார வல்லுநர்களிடமும் பரவலாகக் காணப்படுகிறது" என்று 'தி டைம்ஸ்' இதழில் அபூர்வா மந்தவில்லி எழுதியுள்ளார்.

மிகவும் கடுமையாகப் பரவும் கொரோனா வைரஸின் பி.1.1.7. வேற்றுருவத்தின் வருகைக்கு முன்புதான் சமூகத் தடுப்பாற்றலுக்கான எல்லை வரையறுக்கப்பட்டது. தற்போது அந்தக் கணிப்பு 80%-ஐ நோக்கித் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் வேகமாகப் பரவும் வேற்றுருவங்கள் உருவானால், இந்தக் கணிப்பு இன்னும் அதிகரிக்கும்.

### தடுப்பூசித் தயக்கம்

தடுப்பூசி செலுத்தப்படாத பகுதிகளில் கட்டுப்படுத்தப்படாமல் இந்த வைரஸ் எந்த அளவுக்குப் பரவுகிறதோ அந்த அளவுக்கு அது புதுப்புது அவதாரங்கள் எடுக்க வழி ஏற்படும். தற்போது, உலகளாவிய தடுப்பூசி விநியோகம் மிகவும் ஏற்றத்தாழ்வான நிலையிலேயே உள்ளது. உலக அளவில் போடப்படும் டோஸ்களில் 0.3%-தான் குறைந்த அளவு வருமானம் கொண்ட நாடுகளில் போடப்படுகின்றன.

இந்த எல்லாக் காரணிகளும் சேர்ந்து கொரோனா வைரஸை உலக அளவில் ஒழிப்பது என்பது கிட்டத்தட்ட சாத்தியமற்ற ஒன்றாக ஆக்குகின்றன: நோய்த் தடுப்பாற்றல் வல்லுநர்கள், தொற்றுநோய் ஆராய்ச்சியாளர்கள், வைரஸ் வல்லுநர்கள் போன்ற 100 பேரிடம் 'நேச்சர்' இதழ் ஜனவரியில் ஒரு கருத் துக் கணிப்பு நடத்தியத் இனிவரும் காலங்களில் கொரோனா தொற்று சீரான அளவில் உலகெங்கும் சுற்றிக் கொண்டுதான் இருக்கும் என்று 90% பேர் கருத்து தெரிவித்துள்ளனர். அப்படியென்றால் இயல்பு வாழ்க்கை என்பது திரும்பவே திரும்பாதா? அப் படி இல்லை. இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு சமூகத் தடுப்பாற்றலை மட்டுமே நம்பி இருப்பது தவறு என்று ஹார்வர்டு மருத்துவக் கல்லூரி யைச் சேர்ந்த அப்ரார் கரண் உள்ளிட்ட வல்லுநர்கள் பலரும் தற்போது கூறுகிறார்கள்.

### சமூகத் தடுப்பாற்றல் வரலாறு

முந்தைய பெருந்தொற்றுகளின் வரலாறு நமக்கு இங்கே உபயோகமாக இருக்கலாம்: 1918 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஸ்பானிஷ் ஃப்ளூவின்போது தடுப்பூசி ஏதும் இல்லை. அந்தப் பெருந்தொற்றின்போது மனிதர்களுக்கு சமூகத் தடுப்பாற்றலும் ஏற்பட வில்லை. எந்த நோய்க்குமே சமூகத் தடுப்பாற்றல் எட்டப்பட்டதில்லை என்று யேல் பல்கலைக் கழகத்தின் பொதுச் சுகாதாரப் பேராசிரியர் ஹோவர்டு ஃபோர்மன் என்று கூறுகிறார். 1918 வைரஸுக்கு அதிக மக்களிடையே நோய் எதிர்ப்பு சக்தி தோன்றவே, அந்த வைரஸ் பரிணாமமடைந்தது, இன்றும் காணப்படும் வைரஸ்களிடம் தனது வலுவற்ற வடிவங்களை அது கடத்தியது என்றும் இதழாளர் ஹெலன் பிரான்ஸ்வெல் கூறுகிறார். "உண்மை என்னவென்றால் பெருந்தொற்றுகள் எப்போதுமே ஒரு முடிவை அடைந்து விடுகின்றன" என்கிறார் பிரான்ஸ்வெல்.

சமூகத் தடுப்பாற்றல் என்பது எட்ட முடியாத ஒன்று என்றால் வேறு எதுதான் இலக்கு? "இன்னும் கொஞ்ச காலத்துக்கு, நன்றாகத் தடுப்பூசி போடப்பட்ட நாடுகளில் வைரஸை ஒழிக்க முடியலாம் அல்லது அம்மை போல கட்டுப்படுத்தப்பட்ட அச்சுறுத்தலாக ஆக்கலாம்" என்று 'தி வாஷிங்டன் போஸ்ட்'டில் ஆஷிஷ் கே.ஜா எழுதுகிறார். மக்கள்தொகை அடர்த்தி, காற்றோட்டம், முகக்கவசம் அணிதல் போன்றவையும் பெருந்தொற்று வெடிப்புகளுக்கு எதிராக ஒரு சமூகம் தடுப்புக் கவசம் கொண்டிருப்பதைத் தீர்மானிக்கும்.

தடுப்பூசி கிடைப்பதில் ஏழை நாடுகளுக்கும் செல்வந்த நாடுகளுக்கும் இடையில் இருக்கும் பெரிய இடைவெளியைக் குறைப்பதற்கு எவ்வளவோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தடுப்பூசிக் காப்புரிமைகளுக்குத் தடைவிதிப்பதற்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தற்போது ஆதரவு தெரிவித்துவருவது அந்தத் திசையில் முக்கியமான நகர்வாகும். அதற்கு உலக வர்த்தக நிறுவனம் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்கிறார்கள் மருத்துவர்கள் கரணும் பார்சானெட்டும்.

ஏற்கெனவே சாதாரண ஜலதோஷம் போன்றவற்றுக்குக் காரணமாக இருக்கும் நான்கு கொரோனா வைரஸ்களைப் போல, வரும் ஆண்டுகளில் தற்போதைய கொரோனா வைரஸானது பரிணாமம் அடையும். இந்த வைரஸ்கள் மக்களுக்கு அடிக்கடியும் திரும்பத் திரும்பவும் தொற்றினாலும் மிக அரிதாகவே தீவிர உடல்நலக் குறைபாட்டுக்குக் காரணமாகின்றன. குழந்தைகளுக்கு இந்த வைரஸ்கள் தொற்றும்போது அவர்களுக்கு ஓரளவு எதிர்ப்பு சக்தி ஏற்பட்டு அவர்கள் பெரியவர்களாகும் போது தொற்று ஏற்பட்டால் அதிலிருந்து பாதுகாக்கிறது.

> "தடுப்பூசி கிடைப்பதில் ஏழை நாடுகளுக்கும் செல்வந்த நாடுகளுக்கும் இடையில் இருக்கும் பெரிய இடைவெளியைக் குறைப்பதற்கு எவ்வளவோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தடுப்பூசிக் காப்புரிமைகளுக்குத் தடைவிதிப்பதற்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தற்போது ஆதரவு தெரிவித்துவருவது அந்தத் திசையில் முக்கியமான நகர்வாகும்."

### உசிதமான எதிர்பார்ப்பு

"நமக்கு சமூகத் தடுப்பாற்றல் கிடைக்காது என்று சொல்வது எந்த வகையிலும் மரண தண்டனைத் தீர்ப்பு போலாகாது" என்கிறார் உயிரியல் ஆய்வாளர் ஜென்னி லேவைன். "அப்படி என்றால் அது எப்போதும் இருக்கப் போகிறது என்று அர்த்தம். அப்போது அது தீவிரம் குறைந்த அளவில் எப்போதும் இருக்குமா அல்லது தீவிரமாக எப்போதும் இருக்குமா என்ற கேள்வி எழுகிறது? தீவிரம் குறைந்த அளவில் எப்போதும் இருக்கும் என்பதுதான் என் கணிப்பு. அதுதான் நடக்கும் என்று உண்மையில் தோன்றுகிறது" என்கிறார் லேவைன்.

அது ஒரு உசிதமான எதிர்பார்ப்பு. அதுவே மோசமான சூழல் என்றால் எப்படி இருக்கும்? பெரும்பா லான வைரஸ்கள் மாற்றுவடிவம் அடைய அடைய அவற்றின் தீவிரம் குறையும் ஆனால், கொரோனா வைரஸ் விஷயத்தில் அந்த உத்தரவாதத்தைக் கொடுக்க முடியாது. பி.1.1.7 வேற்றுருவம் இதற்கு ஒரு எடுத்துக் காட்டு. இதன் தொற்றுத்திறன் மட்டும் அல்ல இறப்பு ஏற்படுத்தக்கக்கூடிய திறனும் அதிகம் என்று பல்வேறு ஆய்வுகள் கண்டறிந் திருக்கின்றன. தற்போது உள்ள தடுப்பூசிகள் பலவும் அந்த வேற்றுருவத்தை எதிர்த்து நன்கு போராடக்கூடியவை என்றாலும் தடுப்பூசி அளிக்கும் கேடயத்தைத் தகர்க்கக்கூடிய வேற்றுருவங்கள் உருவாகலாம்.



இன்னும் உருவாகாத வேற்றுருவங்களுக்கும் எதிராக மக்களுக்குத் தடுப்பு சக்தி அளித்து அவர்க ளைக் காக்கக்கூடிய தடுப்பூசி ஒன்றை ஒருவாக்குவதற்குப் பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பந்தயமானது பெருந்தொற்று முடிவதற்குள் ஒரு வெற்றிகரமான தடுப்பூசியை நமக்குத் தரும் என்று அமெரிக்க அதிபரின் தலைமை மருத்துவ ஆலோசகர் அந்தோணி ஃபாஸி கூறுகிறார்.

- 'தி நியூயோர்க் டைம்ஸ்

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை - 5
வினாத்தாள் II

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - சரத்பாபு

**11. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களிலுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.**

1. We are ....................................... (Indian, Srilankan, Italian)
2. This is ............................ Apple (an, a)

**12. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

1. Catch the ball ..........................................................................................

2. Shall we start the game ..........................................................................................

**13. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக ..........................................................................................

**14. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தினைத் தமிழில் எழுதுக.**

மல்லி பொ(த்)த (மு) கன்ன

..........................................................................................

**15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.**

அம்மா தண்ணீர் கொண்டு வந்தார்.

..........................................................................................


16. சென்ற வருடத்திலிருந்து பொலித்தீன் பாவனையானது அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட ஒரு பொருளாக அறிவிக்கப்பட்டது. ஏனெனில் சூழலை பெருமளவில் பாதிப்புறச்செய்வது பொலித்தீன் பாவனையாகும். எனவே **"பொலித்தீன் பாவனையால் சூழல் மாசடையயும் விதம்."** என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டு. எழுவாய் பயனிலை தொடர்புகளுக்கு எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

1. ..........................................................................................
2. ..........................................................................................
3. ..........................................................................................


* **எல்லா வினாக்களுக்கும் சரியான விடைகளை எழுதுக.**

17. | 5 | 4 | 0 | 9 |

நான்கு இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகப்பெரிய எண்ணுக்கும் மிகச்சிறிய எண்ணுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?
..........................................................................................


18. 

இப் பூச்சாடியில் காணப்படும் பூக்களின் இரு மடங்கினை உரோம எண்குறியில் எழுதுக.
..........................................................................................


19. 

i. இச் சமபக்க முக்கோணியின் 1/4 பங்கை வரைந்து நிழற்றிக் காட்டுக.


ii. (நிழற்றிய பின்) நிழற்றப்படாத பகுதியைத் தசம எண்ணில் தருக.
..........................................................................................

20. 


இத்திண்ம உருவில் உள்ள உச்சிகளினதும் ஓரங்களினதும் எண்ணிக்கையின் கூட்டுத்தொகை யாது?
..........................................................................................

21. 


இம் மூன்று துண்டையும் பயன்படுத்தி இவ்வுரு தயாரிக்கப் பட்டது.



i. இவ்வுருவின் சுற்றளவு யாது? ..........................................
ii. இவ்வுருவின் பரப்பளவு யாது? ..........................................

22. 


இப்படம் ஆறு நகரங்களுக்கு இடையிலான தூரம் பற்றிய தகவல் ஆகும்.
1. Aயில் இருந்து F ற்கான தூரம் 390 Km எனின் B யிலிருந்து E க்கான தூரம் எத்தனை கிலோ மீற்றர்?
..........................................................................................

23. ஒரு வைத்தியர் ஒருவருக்கு காலை பகல் இரவு மருந்தாக ஒரு வேளைக்கு 3 மாத்திரைகள் வீதம் 6 நாட்களுக்கு மாத்திரைகள் வழங்கினார். அந் நோயாளிக்குக் கிடைக்கும் மொத்த மருந்து மாத்திரைகள் எத்தனை? ..........................................

24.

| | | | |
|---|---|---|---|
| 16 | 6 | 48 | |
| 12 | 24 | 60 | |
| 18 | 72 | 54 | 40 |

இச் சுற்றில் உள்ள எண்களில் 6, 8 இல் மீதியின்றி வகுபடும் எண்களை ஒழுங்குமுறையாக எழுதுக?
..........................................
..........................................
..........................................

25. குமார் மு.ப 10.25 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்டு அவன் வைத்தியசாலை சென்றடைய பி.ப 4.00 மணி காட்டியது போக்குவரத்துக்குச் செலவாகிய நேரம் யாது?
..........................................................................................

26. 10l 750ml சோடாப் பானத்தில் இருந்து 250ml சோடாப் பானப் போத்தல்கள் எத்தனை தயாரிக்கலாம்?
..........................................................................................

27. அட்டவணையை அவதானித்து இடைவெளி நிரப்புக.

| பொருள் | எண்ணிக்கை | ஒன்றின் விலை | மொத்த விலை |
|---|---|---|---|
| பந்து | 2 | ரூ 60.00 | ரூ 120.00 |
| உபகரணப் பெட்டி | 3 | ரூ ........... | ரூ 240.00 |
| புத்தகம் | 2 | ரூ 100.00 | ரூ 200.00 |
| | | மொத்தம் | .................... |

# மேலும் 62 பேர் மரணம் கொரோனா காவு 2,073

## அரச தகவல் திணைக்களம் தெரிவிப்பு

**கொழும்பு,13**

**இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மேலும் 62 மரணங்கள் பதிவாகியுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் நேற்று தெரிவித்துள்ளது.**

இதனடிப்படையில், நாட்டில் கொரோனாத் தொற்று காரணமாக பதிவாகியுள்ள மரணங்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 73 ஆக அதிகரித்துள்ளது.


நேற்று அறிவிக்கப்பட்ட குறித்த 62 மரணங்களில் 7 மரணங்கள் மே மாதம் 8ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரையும், ஏனையவை ஜூன் மாதம் 1ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரையிலும் பதிவானவையாகும்.

குறித்த காலப்பகுதியில் 35 ஆண்களும், 27 பெண்களும் உயிரிழந்துள்ளனர் என்றும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் (11) கொரோனாத் தொற்றுடன் தொடர்புடைய மரணங்கள் பதிவாகவில்லை என்றும் அரசாங்க தகவல் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ)

# இலங்கையில் 11 நாட்களில் 184 பேருக்கு டெங்கு நோய்

## மே மாதம் 888 பேர் பாதிப்பு



கொழும்பு, ஜூன் 13

நாட்டில் இம்மாதத்தில் இதுவரை 184 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த மாதத்தில் 888 பேருக்கு டெங்கு நோய் ஏற் பட்டுள்ளது.

இந்நிலையில், மழையுடன் கூடிய காலநிலையில் டெங்கு நோய் பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

கொழும்பு, கண்டி உட்பட 10 மாவட்டங்களில் டெங்கு நோய் தலைதூக்கும் அபாயம் இருப்பதால், சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்துக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ)



# எரிபொருள் விலை அதிகரிப்பு: மொட்டு அரசுக்கு வெட்கக்கேடு!

## சாடுகின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கொழும்பு, ஜூன் 13

எரிபொருள் விலை உயர்வுக்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

நாட்டு மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறானதொரு முடிவை “மொட்டு“ அரசு எடுத்துள்ளமை வெட்கக்கேடாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

”மக்களுக்கு ஏற்ற வகையில் தங்களால் இந்த நாட்டை ஆள முடியாது என்பதை “மொட்டு“ அரசு ஏற்கவேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியால் மட்டுமே இந்த நாட்டுக்குச் செழிப்பையும் வளர்ச்சியையும் கொண்டு வர முடியும்” - என்றார். (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 30 ஆயிரம் பேர் கைது!

## பொலிஸ் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஜூன் 13

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 1,027 பேர் கைது செய் யப்பட் டுள்ளனர்.



பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடை பெற்ற ஊடக வியலாளர் சந் திப்பில் பொலிஸ் பேச்சாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண மேற்படி தகவலை தெரிவித்தார்.

அத்துடன், தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறைக்கு வந்த கடந்த ஒக்டோபர் மாதம் முதல் இதுவரை 30 ஆயிரத்து 42 பேர் அந்தச் சட்டத்தை மீறிய குற்றச் சாட்டின்கீழ் கைதுசெய்யப் பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார். (இ)

# வர்த்தமானியின் பிரகாரம் ரூ.1000 சம்பளம் வேண்டும்

## பெருந்தோட்டக் கைக்காசுத் தொழிலாளர்கள் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 13

பெருந்தோட்டங்களில் பதிவு செய்யப்படாத சமயாசமய தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளம் ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்று தொழில் திணைக்களம் அறிவித்துள்ள போதிலும் இதுவரை 700 ரூபா சம்பளமே வழங்கப்படுகின்றது என நுவரெலியா மாவட்டம், அக்கரப்பத்தனையிலுள்ள கைக்காசுத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

பெருந்தோட்டங்களில் கைக்காசுக்கு வேலை செய்பவர்கள் என அழைக்கப்படும் சமயாசமயத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா நாளாந்த சம்பளம் இது வரை நேரத்தியாக வழங்கப்படவில்லை எனத் தொழிலாளர்கள் கவலை வெளியிட்டனர்.

அக்கரப்பத்தனையிலுள்ள கிரன்லி கீழ் பிரிவு, ஊட்டுவள்ளி, சின்னத்தோட்டம் உள்ளிட்ட தோட்டங்களில் தொழில்புரியும் தமக்கு நாளாந்த சம்பளமாக 700 ரூபாவே வழங்கப்படுகின்றது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த மார்ச் மாதம் 5 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானியின் பிரகாரம், பெருந்தோட்டங்களில் பதிவு செய்யாமல் தொழில் புரியும் சமயாசமயத் தொழிலாளர்களுக்கும் ஆயிரம் ரூபா நாள் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, தொழில் ஆணையாளர் நாயகத்தால் பிராந்தியங்களிலுள்ள பெருந்தோட்டக் கம்பனிகளின் உரிமையாளர்களுக்கு இது தொடர்பில் கடிதமொன்றின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

பதிவு செய்யப்படாத சமயாசமய தொழிலாளர்களுக்கு சில பகுதிகளில் 1000 ரூபா நாளாந்த சம்பளம் வழங்கப்படுவதில்லை எனச் சுமத்தப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தியிடம் ஊடகங்கள் வினவியபோது, "1000 ரூபா சம்பள விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் தற்போது வழக்கு விசாரணையில் உள்ளமையால், பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத அனைத்து ஊழியர்களுக்கும் கட்டாயம் 1000 ரூபா வழங்கப்பட வேண்டும்" என்று பதிலளித்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (இ)

# இந்திய கடலோரப் படை வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 13

இலங்கை கடற்பரப்பில் அண்மையில் தீ விபத்துக்குள்ளான “எக்ஸ் - பிரஸ் பேர்ல்“ கப்பலின் அனர்த்தங்களை முகாமைத்துவம் செய்வதற்கு இந்திய கடலோரப் பாதுகாப்புப் படை வழங்கிய ஒத்துழைப்புக்கு பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் கோபால் பக்லேவிடம் நன்றி தெரிவித்தார்.

இந்தியத் தூதுவர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கிடையில் பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போதே பாதுகாப்புச் செயலாளர் இவ்வாறு நன்றி கூறினார்.

மேலும், இரு நாடுகளுக்கிடையில் நீண்டகாலமாக நிலவும் இரு தரப்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்புகள் தொடர்பாகவும் பாதுகாப்புச் செயலாளர் இதன்போது நினைவுகூர்ந்தார்.




பாதுகாப்பு ஒத்துழைப்புகள் தொடர்பாக இந்தியத் தூதுக்குழுவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பாதுகாப்புச் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின்போது கொரோனாத் தொற்றுநோயைக் கருத்தில் கொண்டு இரு நாடுகளுக்கிடையில் நீண்டகாலமாக நிலவும் இராணுவப் பயிற்சி பரிமாற்றத்தின் சீரான செயற்பாடு தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலின்போது ஆராயப்பட்டன. அத்தோடு இந்தச் சந்திப்பை நினைவுகூரும் வகையில் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் இந்தியத் தூதுவர் ஆகியோருக்கிடையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

கொரோனாத் தொற்றுப் பரவல் தடுப்பு தொடர்பான சுகாதார வழிகாட்டுதலுக்கு அமைய இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன, விமானப் படைத் தளபதி ஏயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன, தேசிய புலனாய்வுப் பிரதானி மேஜர் ஜெனரல் ருவன் குலதுங்க, பாதுகாப்பு அமைச்சின் இராணுவ அதிகாரி பிரிகேடியர் தினேஷ் நாணயக்கார, மேலதிக செயலாளர் பி.பி.எஸ்.சி. நோனிஸ், இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கெப்டன் விகாஷ் சூத் மற்றும் அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ)

# தமிழும் மத்திய அரசின் உத்தியோக மொழி? மாநில முதல்வர்களை இணைத்து ஸ்டாலின் போர்க்கொடி!

## சசிகலா தி.மு.கவுக்கு அச்சுறுத்தலாவாரா?

சென்னை மடலில் இந்த வாரம், குறித்த ஒருவரைப்பற்றி அல்லது ஒரு விடயம்பற்றி என்றில்லாமல், மூன்று வெவ்வேறு விடயங்களை அணுக எண்ணு கிறேன்.

தமிழரான ஒருவர், தனது பிறப்புரிமையாலும் அரசியலமைப்பில் அளிக்கப்பட்ட உத்தரவாதத்திலும், தன் வாழ்வையும் வாழ்வாதாரத்தையும் தன் தாய்மொழியான தமிழில் மேற்கொள்வதை, மத்தியில் ஆட்சிபுரியும் வட இந்தியர்கள் ஏற்றுக்கொள்ளும் நீண்டநாள் போராட்டம் இந்த மூன்றினுள் முதலாவ தானது. தமிழ்நாட்டு மக்கள் மத்திய அரசிலிருந்து ஹிந்தி மொழியிலேயே தொடர்புகொள்ளப்படுவது பொதுவானது. வருமானவரி திணக்களம் போன்றவை ஹிந்தியிலேயே தொடர்புகொள்கின்றன. மாநில எம். பிக்கள் மத்திய அரசுக்கு தமிழில் அனுப்பும் கோரிக் கைகளுக்கும்கூட ஹிந்தியிலேயே பதில் வருகிறது. அத்துடன், தமிழ் நாட்டில் புகையிரத பகுதி, தபால் சேவை போன்ற மத்திய அரசு திணைக்களங்களுக்கு இங்குள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு தெரிவாகும் உத்தியோகத்தர்கள் பெரும்பாலும் வடக்கு மாநிலங்களிலிருந்தே தெரி வாகிறார்கள் என்று, எதிர்க்கட்சிகள் பலதடவைகளில் சுட்டிகாட்டி யுள்ளன.


- பகவான் சிங் - தமிழகத்தின் சிரேஷ்ட பத்திரிகையாளர்

இந்த அநீதியைச் சீரமைப்பதான வாக்குறுதியை, ஸ்டாலின் திமுக தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் நாட்டு மக்களுக்கு அளித்திருந்தார். அந்த வாக்குறுதியை நிறை வேற்றுவதற்கான நடவடிக்கை களை தொடங்குவதில் ஸ்டாலின் காலத்தைக் கடத்தவில்லை. சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், அரசியலமைப் பின் 8ஆவது பிரிவில் குறிப்பிடப் பட்ட தமிழ் உள்ளிட்ட அனைத்து மொழிகளையும் மத்திய அரசின் உத்தியோக மொழிகளாக்க உறுதியோடு பாடுபடும் தனது அரசின் அர்ப்பணிப்பை அவர் மீண்டும் வலியுறுத்தினார். அரசியலமைப்பின் 343ஆவது பிரிவு, தேவநாகரி எழுத்து வடிவில் ஹிந்தியை உத்தியோக மொழியாக பிரகடனப்படுத்துகிறது. எட்டாவது பிரிவு, ஹிந்தி உட்பட 22 மொழிகளை, மத்திய அரசின் மொழிகளாக பட்டியலிட்டுள்ளது. ஆனால், 343ஆவது பிரிவு, தேவநாகரி வடிவிலான ஹிந்திக்கு மட்டும் உத்தியோக மொழிக்கான அந்தஸ்தை அளித்துள்ளது.

மத்திய அரசின் உத்தியோக மொழியாக தமிழும் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான தனது பிரச்சார நடவடிக்கைகளை ஸ்டாலின் எதிர்வரும் நாள்களில் தீவிரப்படுத்துவார் என்று நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன், ஹிந்தி பேசாத ஏனைய மாநிலங்களின் முதலமைச்சர்களையும் அவர் இதில் இணைத்துக்கொள்வார்.

இரண்டாவதாக, ‘சின்னம்மா’ என்றழைக்கப்படும் சசிகலா நடராஜன் விவகாரம். ஜெயலலிதாவின் சக்திவாய்ந்த சாம்ராஜ்யத்தில் அவருக்கடுத்த இரண்டாவது ஸ்தானத்தில் இருந்த சசிகலா, ஜெய லலிதா அப்போலோ மருத்துவமனையில் அநுமதிக்கப்பட்டதிலிருந்து அ.இ., அ.தி.மு.கவின் தலைமையை கைப்பற்ற கடுமையாக முயற்சித்தவர். ஜெயலலிதா இறந்தபோது, நிச்சயமாக அவர் அதில் வெற்றிபெற்றிருப்பார். ஆனால், சொத்து வழக்கில் உயர் நீதிமன்றம் அவரைக் குற்றவாளியாக கண்டமை, அவரை தற் சமயம் இதில் தடுத்து வைத்திருக்கிறது.

அ.இ., அ.தி.மு.கவை மீட்பதற்காக விரைவில் வருவேன் என்று கட்சித் தொண்டர்களுக்கு அவர் உறுதியளிக்கும் ஒலிப்பதிவு உரையாடல், தமிழ் நாட்டின் அரசியல், செய்தி ஊடக வட்டாரங்களில் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது. சண்டையிடும் எடப்பாடி பழனிசாமி, ஓ பன்னீர்செல்வம் தரப்புக்களை சசிகலா ஒன்றிணைப்பாரா என்ற விவாதமும் மீண்டும் தலை தூக்கியிருக்கிறது. அத்துடன், அடுத்த ஆண்டு மாநில உள்ளாட்சி தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், இது ஸ்டாலினுக்கும் அவரது திமுகவுக்கும் கடுமையான அச்சுறுத்தலையும் ஏற்படுத்துகிறது. ‘விரைவில் ஒரு நல்ல முடிவு எடுத்து, சீக்கிரமா வந்துடுவேனப்பா, கவலைப்படாதீங்க’ என்று, அந்த சிறிய ஒலிப் பதிவில் சசிகலா தொண்டர்களுக்கு சொல்வதாக, சசிகலாவின் குரல் அதில் கேட்கிறது.

அரும்பாடுபட்டு (அம்மா ஜெயலலிதாவுடன் இணைந்து) கட்டி வளர்த்த கட்சி, உள் சண்டைகளில் இப்படியொரு மோசமான நிலையி லிருப்பதை பார்த்துக்கொண்டு நான் அமைதியாக இருக்கமுடியாது என்று அவர் சொல்கிறார்.

> ‘விரைவில் ஒரு நல்ல முடிவு எடுத்து, சீக்கிரமா வந்துடுவேனப்பா, கவலைப்படாதீங்க’ - சசிகலா

அ.இ., அ.தி.மு.கவின் பலம்மிக்க தேவர் சமூகத்தவரிடையே தனது செல்வாக்கை மீள நிலைநாட்டும் வகையில், தேவர் சமூகத்தைச் சார்ந்த கட்சி செயல்பாட்டாளர்களுடன் மட்டுமே சசிகலா தொடர்புகளை வைத்திருக்கிறார். கட்சியில் அதே செல்வாக்கைக்கொண்ட தமிழ்நாட்டின் வட மேற்கு பகுதி கொங்குநாட்டில், தனது கவுண்டர் சமூகத்தினரிடையே எடப்பாடி பழனிசாமி தனது செல்வாக்கை பேணுகிறார். இதற்கு ஏற்றவகையில், நான்கு ஆண்டுகளுக்கு மேலான தனது முதலமைச்சர் பதவிக்காலத்தில் அரசாங்க ஒப்பந்தங்களையும் மற்றும் சலுகைகளையும் இங்கு அளித்து, அவர் நேர்த்தியாக நிர்வகித்துவந்தார். ஜெயலலிதாவின் மரணத்துக்குப் பின்னர் கட்சியின் தலைமையைக் கைப்பற்ற சசிகலா முயற்சித்தார். ஆனால், அதற்கு இடமளிக்கும் நிலையில் எடப்பாடி இப்போது இல்லை. கட்சிக்குள் தேவர் - கவுண்டர் சமூகத்தவரிடையே மோதல்களை தூண்டிப் பார்ப்பதைவிட, எடப்பாடிக்கு சவால் விடுக்கும் பலத்துடன் சசிகலா இப்போது இல்லை. தேவர் சமூகத்தவரான ஓ. பன்னீர்செல்வத்தின் ஆதரவு இதில் சசிகலாவுக்கு கிட்டும். ஊழல் வழக்குகளால், சசிகலா மக்களின் ஆதரவை பெருமளவில் இழந்திருக்கிறார். அத்துடன், மிகுந்த சாதுரியம் மிக்க ஒரு பெண்ணான ஜெயலலிதா, வெளிப்படையான பேராசைக்குட்பட்டு, ஈற்றில் ஊழல் பேர்வழியாகவே கண்டிக்கப்பட்ட அவரின் அந்த வீழ்ச்சிக்கு ஏதோவிதத்தில் காரணமானவர் என்ற பரவலான ஆத்திரமும் சசிகலாமீது உண்டு. அ.இ., அ.தி.மு.கவின் இந்த உட்பூசல்களில், திரைமறைவு முயற்சிகளின்மூலம் 2025 தேர்தலில் திராவிட நாட்டை கைப்பற்றும் கனவில் பா.ஜ.க. செயல்பட எண்ணுகிறது. பா.ஜ.க. எதிர்ப்பு முதலமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சிகளை தேசிய ரிதியில் ஒன்றிணைக்கும் ஒரு தீவிர முயற்சியில் ஸ்டாலின் ஈடுபட்டுள்ளபோது, மாநிலத்தில் தி.மு.க.எதிர்ப்பு அரசியல் தளத்தை வலுப் படுத்துவதற்கு காவிக் கட்சி சசிகலாவுக்கு முண்டுகொடுக்கலாம். மேற்கு வங்கத்தின் ‘அக்கா’ மம்தா பனர்ஜி, ஸ்டாலினுக்கு இதில் பெரும் உந்து தலாக இருக்கிறார். ராகுல்காந்தியை எதிர்க்கட்சி களின் அடுத்த பிரதமர் வேட்பாராக்கும் ஸ்டாலினின் முன்னைய முயற்சி, காங்கிரஸ் கட்சியின் இளவரசர் இப்போது சந்திக்கும் பெரும் அரசியல் சரிவையடுத்து தகர்ந்துபோனது.

பாஜகவின் அரசியலமைப்பு துவம்சத்தைத் தடுப்பதற் கும், பா.ஜ.க. ஆட்சி இல்லாத மாநிலங்களில் கேவல மான அரசியல் நடவடிக்கைகளின் மூலம், சமஷ்டி முறை மையைச் சீரழிப்பதற்கும் எதிராக மாநிலங்கள் ஒரு குடும்பமாக ஒன்றிணைவதற்கு மம்தா பனர்ஜி கடந்த செவ்வாய்க் கிழமை மீண்டும் தனது அழைப்பை விடுத் திருக்கிறார். இதை நாம், இங்கு மூன்றாவதாக பார்க்கிறோம்.

அண்மையில் திராவிட முன்னேற்றக் கழகம், ‘ஒன்றியம்’ மற்றும் ‘ஒன்றிய அரசு’ என்ற வார்த்தை பிரயோகங்களை ‘மத்திய அரசு’ என்ற வார்த்தைக்கு பதிலாக பாவிப்பது சுவராஷ்யமாக இருக்கின்றது. திமுக ஸ்தாபகரான சி. அண்ணதுரை, மத்திய அரசு என்ற வார்த்தையை நீக்கிவிட்டு, ஒன்றியம் என்ற வார்த் தையை நீண்ட காலத்துக்கு முன்னர் பயன்படுத்தினார். இதனை ஸ்டாலின் மீளவும் முயல்வது, பாரதிய ஜனதா சார்பற்ற ஏனைய மாநில அரசுகள் விரும்பும் சமஷ்டி முறைமைக்கு அநுசரணையாகிறது, மாநில சுயாட் சிக்கான வற்புறுத்தலை தி.மு.க. அதன்தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தது.

மத்திய அரசை ‘ஒன்றியம்’ என்று ஸ்டாலின் குறிப் பிடுவது முற்றிலும் சரியானதே. ஏனெனில் இந்தியா, மாநிலங்களின் ஒன்றியமாகவே இருக்கின்றது. ‘மத்தி’ அல்லது ‘மத்திய அரசு’ என்பது, அனைத்து அதிகாரங் களையும் மத்திய அரசே வைத்துள்ளது என்று, எமது அரசியலமைபில் இல்லாத ஓர் அர்த்தத்தையே கொடுப் பதாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் லோக் சபா உறுப்பினர் டி. ரவிகுமார் குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் கட்சிக்கு தலைமைதாங்கும் சோனியா காந்தி, ராகுல் காந்தி தவிர, ஸ்டாலின் (தி.மு.க.), மம்தா பனர்ஜி (மேற்கு வங்க திரிணாமூல் காங்கிரஸ்), நவின் பட்நாயக் (பிஜூ ஜனதா தள் - ஒரிசா), பிரணாயி ரவி (கேரள இந்திய மார்க்ஸிஸ்ட் கம்யூனிச கட்சி) ஆகிய முக்கிய தலைவர்கள் இணைந்து உருவாகும் கூட்டணி, நாடு முழுவதிலும் தனது செல்வாக்கை விஸ்தரிக்க முயலும் பாஜகவுக்கு முள்ளாகவே குத்தும். ‘அதிகார பகிர்வை மட்டுமே கருத்தில்கொண்டு 1990இல் உருவான தேசிய அரசாங்கம் போலல்லாது, இதுவோர் ஆரோக்கியமான கூட் டாக அமைய முடியும்’ என்று ரவிகுமார் குறிப்பிடுகிறார்.

2024ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் பா.ஜ.கவை எதிர்கொள்ள கூட்டு எதிரணி ஒன்றை உருவாக்குவது ஸ்டாலினின் திட்டம். இதனால், எதிர்வரும் மாதங் களில் காவி உடை தரித்தோரின் இலக்காக ஸ்டாலின் விளங்கக்கூடும். எடப்பாடி பழனிசாமி தனது அ.இ. அ.தி.மு.க. தொண்டர்களிடம், சவால் நிறைந்த எதிர்வரும் நாட்கள்பற்றி குறிப்பிட்டு, புதிய அரசின் ஆறுவார கால தேனிலவு காலம் முடி வுறுகையில், கட்சி நடவடிக்கை களை தீவிரமாக முன்னனெடுக்க தயா ராக இருக்குமாறு குறிப்பிட்டி ருக்கிறார். ■

சென்னை மடல்



# இலங்கை மீது மீண்டும் அமெரிக்க அழுத்தம்?



பேராசிரியர் கே. ரீ. கணேசலிங்கம்

அமெரிக்க - இலங்கை உறவில் மீண்டுமொரு நெருக்கடி ஆரம்பித்திருக்கின்றதென ஊடகங்களின் தகவல்கள் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் சபையில் இலங்கை தமிழர் தொடர்பாக முன்வைக்கப்பட்ட தீர்மானமே அத்தகைய பதற்றத்துக்கும் - குழப்பத்துக்கும் காரணமாகத் தெரிகிறது. இலங்கையின் அமெரிக்காவுக்கான தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க முன்னெடுக்கும் நகர்வுகள் இலங்கை வெளிவிவகார அமைச்சு பதற்றத்தை எதிர்நோக்குகின்றது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. இத்தகைய குழப்பம் ஏன் ஏற்பட்டுள்ளது என்பதை தேடுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முதலில் அமெரிக்க காங்கிரஸில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் சாரம்சத்தை நோக்குவோம். அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட பிரேரணையின் பிரகாரம் 2009 மே 18 போர் முடிவடைந்து 12 வருடங்கள் பூர்த்தியான நிலையில் இறந்த உறவுகளை கௌரவித்தலும் மரியாதை செலுத்தலும் மற்றும் நீடித்த இலங்கை மக்களின் செழிப்பான எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதற்கான நியாயமான அரசியல் தீர்வை முன்வைப்பதற்கான நீதி, பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், புனரமைப்பு, இழப்பீடு, மறுசீரமைப்புக்கான ஆதவை வெளிப்படுத்தல் என்பவற்றை வலியுறுத்திய விடயமாக அமைந்துள்ளது.

இதில் மிகப்பிரதானமாக விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காக போராடிய ஓர் அமைப்பாக குறிப்பிட்டதோடு, வடக்கு - கிழக்கு தமிழரின் தாயகம் என்பதை அங்கீகரிக்கும் விதத்தில் முன்மொழிகளின் உளளடக்கம் அமைந்திருந்தது. இத்தகைய பிரேரணை அமெரிக்க வெளியுறவுக் குழுவின் அனுமதியை பெறும்பட்சத்தில் அமெரிக்க செனட் சபையில் ஏற்றுக்கொள்ளப்படும். அத்தகைய அங்கீகாரம் சாத்தியப்படுமாயின் அமெரிக்க வெளியுறவு கொள்கை வகுப்பில் இலங்கை தமிழ் விடயம் பிராந்திய ரீதியிலும் சர்வதேச மட்டத்திலும் பிரதான இடம்பெறும் அம்சமாக விளங்கும்.

இவ்வாறு இக்காலப்பகுதியில் அமெரிக்கா நடந்து கொண்டதற்கு காரணங்களை புரிதல் அவசியமாகும். அதேநேரத்தில் கோவிட் தடுப்பூசி மற்றும் அதற்கான மருத்துவ உதவிகளை வழங்கும் விதத்தில் ஆசிய - ஆபிரிக்க நாடுகளுக்காக மேற்கொண்டுவரும் அமெரிக்கா இலங்கையை அதில் இணைத்து கொண்டிருப்பதோடு இலங்கைக்கான மருத்தவ அவசர உதவிகளோடு விமானமொன்று இலங்கையை வந்தடைந்தது. யுஎஸ்எய்ட் (USAID) நிறுவனத்தினூடாக அத்தகைய உதவியை வழங்குவதாகவும் அமெரிக்க அறிவித்தது. அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான நிறுவனமான யு.எஸ்.எய்ட். இலங்கைக்கு அனுப்பியுள்ள அவசர உதவியுடன் 8 இலட்சத்து 80 ஆயிரம் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களையும் 1,200 துடிப்பு ஒப்சி மீற்றர்களும் மற்றும் 200 செயற்கை சுவாசக்கருவிகளும், மற்றும் படுக்கைகளும் உள்ளடங்களாக பல மில்லியன் பெறுமானமுடைய உதவிகளை வழங்கியுள்ளது.

மேற்குறித்த இரு விடயங்களும் ஒன்றுக்கொன்று முரணானதாக அமைந்திருந்தாலும் யு.எஸ்.எய்ட்இன் உதவிகள் தென்னாசிய நாடுகளையே அதிகம் இலக்கு வைத்ததாக அவதானிக்க முடிகிறது. யு.எஸ்.எய்ட். உதவியும் பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் என்பனவற்றிற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருப்பதுடன் இவை அனைத்தும் சீனா சார்பு நாடுகள் என்ற அடிப்படையிலும் கொரோனாவிற்கு எதிரான தடுப்பூசி உலகளாவியரீதியில் தடுப்பூசி இராஜதந்திரத்தை (Vaccine Diplomacy) உருவாக்கியது என்றும் கருதுவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது. இதற்கு வலுவான இன்னொரு காரணி ஜூன்-06, 2021 அமெரிக்க உதவிகள் இலங்கைக்கு வந்த அன்றய தினத்தில் 10 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகளும் இலங்கையை வந்தடைந்தன. இத்தகைய இராஜதந்திர நகர்வை முதலில் தொடக்கிய நாடு இந்தியா என்பது குறிப்பிடத்தக்கது. எதுவாயினும் இலங்கை விடயத்தில் அமெரிக்காவின் நகர்வு தீவிரம் பெற ஆரம்பித்துள்ளது. இதற்கான காரணங்களை விளங்கி கொள்ளுதல் அவசியமாகிறது.

முதலாவது, வெளிப்படையாக பார்த்தால் சீன - இலங்கை உறவின் மீதான பதில் நடவடிக்கையாகவே தெரிகிறது. குறிப்பாக கொழும்பு துறைமுக நகர சட்டமூலம் அதிக ஆபத்தை பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் அமெரிக்க, இந்திய நலக்களுக்கு பாதிப்பை ஏற்படத்தக் கூடியதென்பது மதிப்பீடாக உள்ளது. சீனாவின் இலங்கை மீதான நிரந்தரமான செல்வாக்கைத் தடுக்கும் விதத்தில் இத்தகைய நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பது தெளிவாக தெரிகிறது. தற்போதைய அரசாங்கத்தின் வெளியுறவு சீனா சார்பான தாக அமைந்திருப்பதால் அமெரிக்கா, இந்தியா என்பன அதிருப்தி அடைந்துள்ளன.

யு.எஸ்.எய்ட் இன் உதவிகள் தென்னாசிய நாடுகளையே அதிகம் இலக்கு வைத்ததாக அவதானிக்க முடிகிறது. யு.எஸ்.எய்ட். உதவியும் பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் என்பனவற்றிற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருப்பதுடன் இவை அனைத்தும் சீனா சார்பு நாடுகள் என்ற அடிப்படையிலும் கொரோனாவிற்கு எதிரான தடுப்பூசி உலகளாவியரீதியில் தடுப்பூசி இராஜதந்திரத்தை உருவாக்கியது என்றும் கருதுவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது.

இரண்டாவது, இலங்கை - சீன உறவு சீனாவின் பொருளாதார செழிப்பையும் அவ்வாறே ஒரே சுற்று ஒரே பாதை என்ற சீனாவின் வியூகத்தையும் வெற்றிகரமாக நகர்த்த உதவும் என்பது அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்து சமுத்திரத்தின் மையத்தில் விளங்கும் இலங்கையுடனான உறவை, சீனாவின் வர்த்தக மார்க்கங்களுக்கு பெரும் உந்துதலான அமையும் என்றும் கருதப்படுகிறது. கொழும்பை மையப்படுத்தியே பிரித்தானியரும் பின்னர் அமெரிக்காவும் இந்து சமுத்திர பிராந்தியம் மீது பொருளாதார, அரசியல் மற்றும் இராணுவ நலன்களை அடைந்திருந்தன. இலங்கையை இழத்தல் என்பது இந்துசமுத்திரத்தை இழப்பதற்கு சமனானது என்ற வாதம் பிரித்தானியர் காலத்திலேயே உரையாடப்பட்டு வந்துள்ளது. தொழில்நுட்பங்கள் பெருமளவில் வளர்ந்த பின்பும் இலங்கையின் முக்கியத்தவம் அற்றுப்போகவில்லை. எனவேதான் இலங்கை - சீனா உறவு அமெரிக்க மற்றும் மேற்கு நலன்களை பாதகமான சூழலுக்கு கொண்டுசெல்லும் என அமெரிக்கர்கள் அச்சமடைகிறார்கள்.

மூன்றாவது, இலங்கை - சீனா உறவென்பது இந்தோ - பசுபிக் மூலோபாய திட்டமிடல்களை அதற்கான நகர்வுகளை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது. காரணம் இந்தோ - பசுபிக் உபாயத்தின் முக்கிய நாடுகளில் ஒன்றான இந்தியா, இலங்கை - சீனா உறவினால் இரு கடலுக்குமான இணைப்பை சாத்தியமற்றதாக்குவதோடு அத்தகைய உபாயம் முடிவுக்கு வரும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளது. அதாவது, இந்தோ - பசுபிக் கடலை இணைக்கும் பிரதான நாடுகள் அனைத்தும் சீனாவின் ஒரே சுற்று ஒரே பாதைக்குள் இணங்கி செயல்படுகின்றது. அதனால், கொழும்பு துறைமுகம் அமெரிக்கா செல்வாக்கை இழக்கும் நிலை ஏற்படுமாயின் அதற்கு பதிலீடான நகர்வுகளை அமெரிக்கா முன்னெடுக்கும் என்பதையும் காங்கிரஸில் முன்வைக்கப்பட்ட தீர்மானம் உணர்த்துகின்றது.

நான்காவது, அமெரிக்க காங்கிரஸில் முன்வைக்கப்பட்ட உள்ளடக்கங்கள் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களாலோ அல்லது தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு பதிலீடாகவோ அமைந்திருக்கின்றது என்பதற்கு அப்பால் அமெரிக்க நலன்களை அடைவதற்கான உத்திகளாக அதன் உள்ளடக்கங்கள் காணப்படுகின்றது. விடுதலைப் புலிகளை தடை செய்துள்ள அமெரிக்கா அத்தகைய தடையை மீள மீள தொடரும் இந்தியாவுடன் நெருக்கமான உறவை பேணுகிறது. இந்த நிலையில் அமெரிக்கா இத்தகைய தீர்மானத்தை முன்வைத்தள்ளது என்பது அதன் அரசியல், பொருளாதார இராணுவ நலனுக்கானதேயாகும். அத்தகைய நலனை அமெரிக்கா எட்டுவதற்கு மேற்குறித்த இரு விடயங்களை வெறும் அரசியல் சுலோகமாக அன்றி நிரந்தரமான கோட்பாடாக ஆக்குவதற்கும் அமெரிக்கா தயாராகவே இருக்கும். இங்கு முக்கியம் அமெரிக்க நலன்களேயாகும்.

எனவே, அமெரிக்காவின் நகர்வு அமெரிக்க நலனுக்கு உட்பட்டதென்பது உலகம் முழுவதும் கண்டு கொள்ளக்கூடிய ஓர் அம்சமாகும். எனினும், அத்தகைய நலன்களுக்குள் தமிழர்களுடைய அபிலாசைகளும் நலன்களும் பூர்த்திசெய்யக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது. அத்தகைய வாய்ப்பு சரியாக அடையாளம் காண்பதுவும் அதனை நோக்கி நகருவதும் இன்றைய தமிழ் அரசியல் பரப்பில் அவசியமான பொறிமுறையாகும். மீளவும் அறிக்கைகளையும், வாதங்களையும் முன்வைப்பதை விடுத்து அமெரிக்காவின் தளர்ச்சியான போக்கை அடையாளம் கண்டு தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வொன்றைக் கண்டறிதல் அதற்கான நகர்வை மேற்கொள்ளல் அவசியமானதொன்றாக உள்ளது.

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும், முன்னாள் பொருளாதார அமைச்சரும், தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளருமாகிய பஸில் ராஜபக்ஷ அமெரிக்காவில் இருக்கும் போது இத்தகைய நகர்வுகள் மேற்கொள்ளப்படுவதென்பதும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். அவருடைய மருத்துவ தேவை மாத்திரமின்றி இலங்கையர்களின் மருத்துவ தேவையும், இலங்கை - சீனா உறவின் பிரதிபலிப்பும் காங்கிரஸ் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதென்பது கவனிக்க வேண்டிய விடயமகும்.

இதேநேரம் இலங்கை, அமெரிக்காவுக்கான தூதரினூடாக அமெரிக்காவிற்கு முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கையில் இரு விடயங்கள் முதன்மை பெறுகின்றது. ஒன்று, அமெரிக்க காங்கிரஸில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தை நிறைவேற்றக்கூடாதென விண்ணப்பித்துள்ளது. இரண்டு, இலங்கை அரசாங்கம் ஜெனிவா தீர்மானத்தை அடுத்து, கடந்த 2021ஜனவரி மாதத்திலிருந்து அதற்கான செயலணிகளை உருவாக்கி செயல்பட்டு வருவதாகவும் அத்தகைய பணிகள் கோவிட் தொற்றினால் நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பதாகத் தெரிவித்துள்ளதுடன், பெரியளவில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சரும், அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவரும் இராஜதந்திர நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

எனவே, இதனை அவதானிக்கும் போது, இலங்கை விடயத்தில் அமெரிக்கா மீளவும் அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துள்ளதாகவே தெரிகிறது. இதன்மூலம் தமிழ் மக்களின் நலன்களை அமெரிக்கா தனக்கு ஏற்ற வகையில் கையாள முயன்றிருப்பதையும் அதனை எதிர்கொள்வதற்கு தமிழ் தலைமைகள் தயாராக வேண்டுமென்பதுமே தற்போதைய அரசியலாக உள்ளது.

- நன்றி: அருவி

# கடற்றொழிலாளர்களின் பாதிப்புகளுக்கு விரைவான நடவடிக்கை மேற்கொள்வேன்

## நீர்கொழும்பில் அமைச்சர் டக்ளஸ் உறுதி

நீர்கொழும்பு, ஜூன் 13

**"எக்ஸ் - பிரஸ் பேர்ல்" கப்பல் விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களுக்கான முதற்கட்ட வாழ்வாதார உதவித் தொகை உடனடியாக வழங்கப்படும் என்று உறுதியளித்த கடற் றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஏற்பட்டுள்ள அனைத்து பாதிப்புக்களும் மதிப்பீடு செய்யப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் தீர்த்து வைக்கப்படுவதுடன் எரிபொருள் விலையேற்றம் தொடர்பாக கலந்துலையாடி நியாயமான பரிகாரம் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.**

இலங்கை கடற்பரப்பில் தீப்பற்றிய 'எக்ஸ் - பிரஸ் பேர்ல்' கப்பல் கடற்றொழிலாளர்களுக்கு ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் தொடர்பாக நீர்கொழும்பு பிரதேச மீன்பிடி சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இமிடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பிலேயே மேற்குறித்த கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.



நீர்கொழும்பு மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மேற்படி சந்திப்பில், குறித்த கப்பல் விபத்தால் தாங்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளை எடுத்துரைத்த நீர்கொழும்பு கடற்றொழிலாளர்கள், தமக்கு தற்போது ஏற்பட்டுள்ள வாழ்வாதாரப் பாதிப்புகளுக்கு அரசு நட்ட ஈட்டை அல்லது நிதி நிவாரணங்களை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

மேலும், கப்பல் விபத்து மாத்திரமன்றி, கொரோனா பரவல் காரணமாகவும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்ற நிலையில், எரிபொருளின் விலையேற்றம் மேலதிக சுமையாக அமைந்திருக்கின்றது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், அண்மைக்காலமாக சந்தைக்கு வருகின்ற வலைகளின் தரம் தொடர்பாக அதிருப்தி வெளியிட்ட கடற்றொழிலாளர்கள், தரமான வலைகள் தொடர்பாக கடற்றொழில் அமைச்சு அவதானம் செலுத்த வேண்டும் எனவும் சுட்டிக் காட்டினர்.

அது தவிரவும் தமது தொழில் நடவடிக்கைகள் இயல்பு நிலைக்குத் திரும்பும் வரை பாதிக்கப்பட் டுள்ள கடலை நம்பி வாழும் சுமார் பத்தாயிரம் குடும்பங்களின் எதிர்காலம் தொடர்பாக தீர்க்கமான முடிவொன்றை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

கடற்றொழிலாளர்கள் மாத்திரமன்றி, கருவாடு உற்பத்தியில் ஈடுபட்டவர்களும் வாழ்வாதா ரப் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள நிலையில், அவர்களுக்கான நட்டஈட்டை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் உறுதியளிக்கப்பட்ட முதற்கட்ட வாழ்வாதார உதவித்தொகையை அடுத்த சில நாட்களுக்குள் அனைவருக்கும் கிடைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

முழுமையான பாதிப்புகளுக்கான பரிகாரங்கள் கட்டங்கட்டமாக விரைந்து மேற்கொள்ளப்படும்.

எரிபொருள் விலையேற்றம் தொடர்பாக ஜனா திபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடி நியாயமான பரிகாரம் பெற்றுத்தரப்படும் - என்றார். (இ)

# இரண்டாவது 'டோஸ்' தடுப்பூசிகள் இம்மாத இறுதியில் குடாநாட்டுக்கு

## இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 13

"தடுப்பூசி பகிர்ந்தளிக்கப் படாத மாவட்டங்களுக்கு அடுத்தடுத்த கட்டங்களில் கிடைக்கும் தடுப்பூசிகள் பகிர்ந் தளிக்கப்படும். அதன் பின்னரே முன்னர் தடுப்பூசி வழங்கிய மாவட்டங்களுக்கு இரண்டாம் கட்டமாக தடுப்பூசிகள் வழங் கப்படும். யாழ்ப்பாணம் மாவட் டத்தில் முதலாவது டோஸ் தடுப்பூசி ஏற்றியவர்களுக்குரிய இரண்டாம் கட்டத் தடுப்பூசி கள் இந்த மாத இறுதியில் அனுப்பி வைக்கப்படும்."

- இவ்வாறு மருந்து உற் பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்கு படுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததா வது:-

"சீனாவிலிருந்து இதுவரை 31 இலட்சம் சினோபார்ம் கொரோனாத் தடுப்பூசிகள் இலங்கைக்கு வந்துள்ளன. அவற்றில் முதல் வந்திருந்த 11 இலட்சம் தடுப்பூசிகள் மக்க ளுக்கு ஏற்றப்பட்டன. இதில் 50 ஆயிரம் தடுப்பூசிகளை யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வழங்கியிருந்தோம். பின்னர் வந்திருந்த 10 இலட்சம் சினோ பார்ம் தடுப்பூசிகளை வடக்கு மாகாணத்துக்கு வெளியேயுள்ள மாவட்டங்கள் பலவற்றுக்கு தலா 50 ஆயிரம் வீதம் பகிர்ந் தளிக்கப்பட்டுள்ளன. அவற்றை மக்களுக்கு ஏற்றும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 9ஆம் திகதி இறுதி யாக வந்த 10 இலட்சம் சினோ பார்ம் தடுப்பூசிகளில் பெரும்பாலானவை இரண்டாம் டோஸுக்காகப் பயன்படுத்தப் படவுள்ளன. இவற்றில் அதிக மான தடுப்பூசிகள் மேல் மாகாணத்தில் முதல் டோஸ் பெற்ற மக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இனிவரும் நாள்களிலும் சீனா உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குத் தடுப்பூசிகள் வரவுள்ளன. அவற்றில் ஒரு தொகுதி யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கிலுள்ள மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

இவ்வருடத்துக்குள் இன, மத, மொழி, பிரதேச வேறு பாடுகளின்றி இலங்கையில் உள்ள அனைவருக்கும் கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக இருக்கின்றது. அப்போதுதான் அடுத்த வருடத்துக்குள் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியும்" - என்றார். (இ)

# ரிஷாத்தின் மனு மீதான பரிசீலனை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 13.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோரின் கைதுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுக்கள் மீதான பரிசீலனை எதிர்வரும் 23ஆம் திகதி வரை ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி தவராசா ஊடாகத் தாக்கல் செய்யப்பட்ட அந்த இரண்டு அடிப்படை உரிமை மனுக்களும் நீதியரசர்களான எல்.டி.பி தெஹிதெனிய, பீ.பத்மன் சூரசேன மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் முன்னிலையில் நேற்றுமுன்தினம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த மனுக்களுடன் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு மிக முக்கியமான ஆவணங்களைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் கோரியிருந்த போதிலும், அவை இதுவரை கிடைக்கவில்லை என்று மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தெரிவித்தார்.

மனுதாரர் தரப்பினர் கோரும் ஆவணங்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்தால், அடுத்த வாரத்துக்குள் அவற்றைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவ தென்னக்கோன் மன்றில் தெரிவித்தார்.

அதன்படி, இந்த மனுக்கள் மீதான விசாரணை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை ஒத்திவைக் கப்பட்டது. (இ)

# மரண அறிவித்தல்

பிறப்பு
02 - 05 - 1960



இறப்பு
09 - 06 - 2021

## பரஞ்சோதி மோகனதாஸ்

### (வீடியோ மோகன்)

யாழ். கச்சேரி, பாரதி வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Villetaneuse ஐ வதிவிடமாகவும் கொண்ட பரஞ்சோதி மோகனதாஸ் அவர்கள் கடந்த 09.06.2021 புதன்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற பரஞ்சோதி – கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் தனபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும்,கிஷ்னாபவானியின் (பவானி) அன்புக் கணவரும், மிதுலன், விதுஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, தேவதாஸ் (இலங்கை), சிலோசானா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,லதா, மகேஸ்வரன், பத்மினி, சுரேஸ், ரமேஸ், சதீஸ், நந்தன், மகேஸ், திஷானி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,துளசி, கஜானனன், சரனியா ஆகியோரின் அன்பு சித்தப்பாவும்,அனித்தா, பிருந்தா, லிண்டா, தீபக் ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*பார்வைக்கு*
Get Direction
Friday, 11 Jun 2021 3:00 PM - 4:00 PM
POMPES FUNÈBRES DES JONCHEROLLES 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

*கிரியை*
Get Direction
Saturday, 12 Jun 2021 10:30 AM - 11:30 AM
POMPES FUNÈBRES DES JONCHEROLLES 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

*தகனம்*
Get Direction
Sunday, 13 Jun 2021 10:30 AM - 11:30 AM
POMPES FUNÈBRES DES JONCHEROLLES 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

*வீட்டு முகவரி:*
Rue Dussoubs,
75002 Paris, France.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு: **மிதுலன் - மகன்**
Mobile : +33641970353

## எரிபொருள் விலை உயர்வை...

வைத்திருப்பதற்கான நிதி, பொதுமக்கள் நலனுக்காகப் பயன்படுத்தப்படாதது ஏன் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்தாலும், அது மக்களைப் பாதிக்காமல் இருப்பதற்காக அரசு கடந்த ஆண்டு ஒரு நிதியத்தை ஆரம்பித்தது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியத்தை இதுபோன்ற இக்கட்டான நிலையில், மக்கள் பயனடையக் கூடிய விதத்தில் பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

கொரோனா மற்றும் பயணக் கட்டுப்பாடு காரணமாக அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வடைந்துள்ளது எனவும், இந்த எரிபொருள் விலை அதிகரிப்பு அதனை மேலும் தீவிரப்படுத்தும் எனவும் சுனில் ஹந்துன்நெத்தி மேலும் குறிப்பிட்டார். (இ)

## சர்வதேச...

டிருக்கின்றது. வெளிநாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு இந்நாட்டின் ஆட்சியாளர்களே வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கின்றார்கள்."

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தற்போதைய அரசு பதவியேற்று ஒருவருடம் மாத்திரமே கடந்துள்ள நிலையில், நாட்டின் அனைத்துத் துறைகளும் வலுவிழந்துள்ளமையைத் தெளிவாக அவதானிக்க முடிகின்றது. அரசு அதன் இயலாமையை மறைத்துக்கொள்வதற்காக கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடியை நன்கு பயன்படுத்தி வருகின்றது.

மறுபுறம் நாட்டின் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியை எதிர்கொண்டிருக்கும் நிலையில், அதனைச் சீர்செய்வதற்கு முற்படாமல் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக மென்மேலும் நிதியை அரச தரப்பினர் வீணடித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

அதேவேளை, மனித உரிமைகளை மீறும் செயற்பாடுகளும், அரசை விமர்சிப்போர் மீது அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதற்கான நடவடிக்கைகளும் மற்றொரு பக்கத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கைக்குக் கடந்த காலத்தில் கிடைத்த ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையும் தற்போது இல்லாமல்போகக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் இந்த வரிச்சலுகை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

சர்வதேச மட்டத்தில் இலங்கை எதிர்கொண்டிருக்கும் பாரிய நெருக்கடியாகவே இதனை நாம் கருதுகின்றோம். இவ்வாறான யோசனை நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் எவ்வாறு செயற்படும் என்று தெரியாதபோதிலும், தீர்மானத்துக்கு அமைவாக செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் உயர்வாகக் காணப்படுகின்றன.

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒழிக்கப்படும் என்று அரசால் வாக்குறுதியளிக்கப்பட்ட போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படாமை, அதனைப் பயன்படுத்தி அரசாசுக்கு எதிரானவர்கள் தண்டிக்கப்படுதல், அதிகரித்துவரும் இராணுவ மயமாக்கம் ஆகிய மூன்று காரணிகளைக் குறிப்பிட்டே ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் மேற்குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

ஐரோப்பிய ஒன்றியம் போன்ற அமைப்புக்களால் இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளும் சரியானவை என்று நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம். ஆனால், இந்த விடயம் மிகவும் பாரதூரமானது என்றே கருதுகின்றோம்.

ஏனெனில் அரசின் முறையற்ற கொள்கைகள் மற்றும் தவறான செயற்பாடுகளை முன்னிறுத்தியே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது" - என்றார். (இ)

## பொலிஸாருக்கான...

யையும் வெளிப்படுத்தியுள்ளது.

சமூக ஊடகங்களில் கொரோனா தொடர்பான போலியான செய்திகளை பரப்புபவர்கள் மற்றும் ஒற்றுமையின்மை, வெறுப்பு போன்றவற்றை தோற்றுவிக்கும் போலிச் செய்திகள், புகைப்படங்கள், காணொளிகளின் பகிரல் தொடர்பில் கண்காணிக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விஷேட குழு ஒன்று அண்மையில் நியமிக்கப்பட்டது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில், உரிய விதிகளை மீறுவோருக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்கான அதிகாரம் இலங்கை பொலிஸின் குற்ற விசாரணைப்பிரிவு மற்றும் கணினி குற்றப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த பிரிவுகள் இணையத்தை கண்காணிப்பதன் மூலம் உரிய விதிகளை மீறுவோருக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ளும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இதனை தெரிவித்துள்ளது.

அவதூறு மற்றும் வன்முறை தூண்டல்களுடன் தொடர்புடைய சம்பவங்களின் போது உரிய சட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து எவ்வித ஆட்சேபனைகளும் இல்லை என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும் , சமூக ஊடகங்களில் பகிரப்படும் செய்திகளில் போலிச் செய்திகளை வகைப்படுத்துவதற்கு பொலிஸாருக்கும் நிர்வாகத்தின் மற்ற உறுப்பினர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறித்து சங்கம் அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இதன் மூலம் அவர்களின் உள்ளார்ந்த முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு, சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்வதற்கும், தடுத்து வைப்பதற்கும் பொலிஸ் உள்ளிட்ட நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர்களுக்கு இச்சட்டத்தின் மூலம் அனுமதி வழங்கப்படுகின்றமை குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விசனத்தை வெளியிட்டுள்ளது. (இ)

## நேற்றும்...

காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு இலட்சத்து 21 ஆயிரத்து 263 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 86 ஆயிரத்து 516 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 73 ஆக எகிறியுள்ளது. (இ)

## வெள்ளவத்தையில்...

னர் என பொதுசுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்

குறிப்பாக வெள்ளவத்தை பரகும்பா மாவத்தையிலுள்ள தொடர்மாடியொன்றில் பல நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தொடர்மாடியில் 100க்கும் அதிகமானவர்களை பிசிஆர் சோதனைக்கு உட்படுத்தியவேளை அதில் பெரும்பாலானவர்கள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து பரகும்பா மாவத்தையும், அதனையடுத்துள்ள சில பகுதிகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

# திடீரென கடும் காற்றுடன் யாழ்ப்பாணத்தில் மழை

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழில் கடந்த பல நாட்களாக கடும் வெயிலுடனான காலநிலை நீடித்து வந்த நிலையில் நேற்று இரவு திடீரென பலத்த காற்றுடன் கூடிய கடும் மழை பெய்ய ஆரம்பித்தது.

இடி, மின்னல் அதிகமாக இருந்ததன் காரணமாக மின்சாரத்தடை யாழ். குடாநாடு முழுவதும் ஏற்பட்டது.

வளிமண்டலவியல் திணைக்களம் இவ்வாறு திடீர் மழை ஏற்படும் என்று எவ்விதமான முன்னறிவித்தலும் விடுக்காத நிலையிலேயே மழை பொழிய ஆரம்பித்தது.

கடும் காற்றினால் சில இடங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்தன.

## கம்மன்பிலவின்...

விடுத்திருப்பது குறித்து தனது முகநூல் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே இதனை மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

அவரது பதவின் விபரம்:

"மக்கள் நெருக்கடியில் இருக்கும் வேளையில், எரிபொருள் விலையை ஏற்றியமைக்கு பொறுப்பேற்று எரிபொருள் அமைச்சர் (கம்மன்பில) ராஜினாமா செய்ய வேண்டுமென கூறுவது யார்..?

பொதுஜன பெரமுன (SLPP) என்ற ஆளும் கட்சி..!

திடீரென அரசு இவ்வளவு நாகரீகமாக செயல்படுவதை பார்க்கும் போது,

தமிழ் சினிமா சிரிப்பு நடிகர்களின் "நீ ஒன்னும் அவ்வளவு நல்லவன் கிடையாதே, ப்ரதர்" என்ற பிரபல சந்தேக வசனம் ஞாபகத்தில் வந்து தொலைக்கிறதே..!

அமைச்சரவைத் தீர்மானத்துக்கு பொறுப்பேற்று ஜனாதிபதியல்லவா ராஜினாமா செய்யவேண்டும்..!

கம்மன்பில யார்?

அரசில் உள்ள சிறுகட்சி அமைச்சர். இது ஏதோ வீடு தீப்பற்றியதற்கு, வீட்டில் வளர்க்கும் கூண்டுக்கிளியை பலிகடா ஆக்குவதாக தெரியுது..!

ஆனாலும், காலமெல்லாம் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக விஷம் கக்கி வந்த கம்மன்பிலவின் கதியை நினைத்து கவலைப்பட ஏதுமில்லை..!

இதற்கு முன்னால் அரசு தலைமையின் கோபத்துக்கு ஆளாகி வாயை மூடிக்கொண்டு இருக்கும் வீரவன்ச கதியே இன்று இவருக்கு..!

இவ்வாறு மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

## தொடர் முடக்கத்தால்...

கோள் விடுத்துள்ளார் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா புவனேஸ்வரன்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் நேற்று கலந்துகொண்ட அவர் இவ்வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

"புலம்பெயர் நாடுகளில் உள்ள கொடையாளர்கள், தன்னார்வத் தொண்டர்கள் இங்குள்ள மக்களுக்கு அதிகளவான உதவிகளை வழங்கி வருகின்றனர். அவர்களின் பணி மகத்தானது.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள அபாய நிலைகளால் குழந்தைகளின் கல்வி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அதற்கான மாற்று வழிகளை அரசால் முன்னெடுக்க முடியவில்லை.

அவ்வாறு முன்னெடுக்கும் முயற்சிகள் தோல்வியில் முடிகின்றன. காரணம் வீதமான மாணவர்கள் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்கள். அவர்களால் புதிய தொழிநுட்ப முறை கற்கைகளைத் தொடரமுடியாதுள்ளது. ஆகையால் கொடையாளர்களும், தன்னார்வத் தொண்டர்களும் அவர்களின் தொழிநுட்பத் துறைக்கூடான கற்றலுக்கு உதவ வேண்டும்.

அத்தோடு தொலைத்தொடப்பு சேவை நிறுவனங்கள் வறிய மாணவர்கள் கற்பதற்கு வசதியாக அவர்களின் வறுமை நிலையை உறுதிப்படுத்தி அவர்களின் கற்றலுக்கான இணைய வசதிகளை இலவசமாக வழங்க வேண்டும்.

குறிப்பாக பொதுப்பரீட்சைகளை எதிர்கொண்டுள்ள மாணவர்களுக்கு விசேடமாக உதவ வேண்டும்" - என்றார். (இ)

## எரிபொருள்...

நாட்டு மக்கள் நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் உள்ள நிலையில் இந்த விலையேற்றத்துக்குப் பொறுப்பேற்று இதற்குப் பொறுப்பான அமைச்சர் பதவி விலக வேண்டும் என பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவாசத்தின் கையொப்பத்துடன் நேற்று மாலை வெளியிட்ட அறிக்கையில் பொதுஜன பெரமுன வலியுறுத்தியுள்ளது.

நாட்டு மக்கள் கொரோனா நெருக்கடிக்கு முகங்கொடுத்துக்கொண்டுள்ள நிலையில், இந்த விலை உயர்வு அரசாங்கத்துக்கு நெருக்கடியைக் கொடுப்பதை நோக்கமாகக்கொண்டிருந்ததா எனவும் சந்தேகிக்க வேண்டியுள்ளது எனவும் பொதுஜன பெரமுனவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் உதய கம்பன்பில இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு பதவி விலக வேண்டும் என இந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

எரிபொருட்களின் திடீர் விலையேற்றத்தை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. என்பன கடுமையாக விமர்சித்திருக்கும் நிலையில், ஆளும் கூட்டணிக்குள்ளும் இந்த விவகாரம் ஒரு புயலைக் கிளப்பியிருப்பதைத்தான் பொதுஜன பெரமுன சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை வெளிப்படுத்துகின்றது.

## யாழ். குடாநாட்டில்...

மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 02 பேர்,

யாழ்.போதனா வைத்தியசாலையில் இருவர்,

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர்,

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 12 பேர்**

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 12 பேர்,

**கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவர்**

உருத்திரபுரம் பிரதேச வைத்தியசாலையில் ஒருவர்

ஆகியோர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் பரந்தன் தனிமைப்படுத்தல் நிலையத்தில் நால்வரும், இரணைமடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவரும், கிளிநொச்சி கொரோனா வைத்தியசாலையில் ஒருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## பேக்கரி...

விலையை அதிகரிக்க அரசு அனுமதி வழங்கும் பட்சத்தில் பேக்கரி உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட வாய்ப்புள்ளது எனவும் அவர் கூறினார்.

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டமை பேக்கரிப் பொருட்களின் உற்பத்தியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், பேக்கரி உணவுப் பொருட்களின் விலை உயர்வு குறித்து சங்கம் இறுதி முடிவு எடுக்கவில்லை எனவும் இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்த்தன மேலும் தெரிவித்தார். (இ)

ஈழநாடு
Eelanadu

# அமெரிக்க காங்கிரஸ் தீர்மானத்தால் அஞ்சவில்லையாம் இலங்கை அரசு!

## அமைச்சர் விமல் கூறுகின்றார்



**கொழும்பு, ஜூன் 13.**

**"இலங்கை தொடர்பான விடயத்தைக் குறிப்பிட்டு அமெரிக்க காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியமையால்தான் அமெரிக்க அதிகாரிகளைச் சந்தித்தோம். கண்டனங்களையும் தெரிவித்தோம். எமது இந்த நடவடிக்கை அவர்களின் மீதான தீர்மானத்தின் அச்சத்தால் எடுக்கப்பட்டது என்று எவரும் அர்த்தம் கற்பிக்கக் கூடாது. அது தவறு."**
**- இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.**

இலங்கை தொடர்பில் அமெரிக்க காங்கிரஸில் அண்மையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் உள்பட ஆயுத இயக்கங்கள் தமிழ் மக்களின் சுதந்திரத்துக்காக போராடின என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானம் தொடர்பில் இலங்கை தனது ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தது. அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர், இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டு நகர்த்த வேண்டாம் என்று கோரியிருந்தார். வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் துணைத் தூதரை நேரில் அழைத்து கண்டனம் வெளியிட்டிருந்தார்.

இவ்வாறானதொரு நடவடிக்கை ஏன் இலங்கை அரசு அவசர அவசரமாக மேற்கொள்கின்றது என்று அமைச்சர் விமல் வீரவன்சவிடம் ஊடகங்கள் வினவியபோது,

"அமெரிக்க காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதிகளின் இலங்கை மீதான தீர்மானம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் புத்துயிர் ஊட்டும் வகையில் அமைந்துள்ளது. அப்பட்டமான பொய்க்குற்றச்சாட்டுக்கள் இந்தத் தீர்மானத்தில் உள்ளன. இந்தத் தீர்மானத்துக்கு இலங்கை அரசு வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

தீர்மானம் தொடர்பான இலங்கை அரசின் நிலைப்பாடு வொஷிங்டனுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. தீர்மானம் போல் இலங்கை அரசை அடிபணிய வைக்கும் நோக்கில் அமெரிக்க காங்கிரஸ் தீர்மானமும் தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும், இரு தீர்மானங்களையும் நாம் அடியோடு நிராகரிக்கின்றோம்.

அமெரிக்க காங்கிரஸ் தீர்மானம், இலங்கை மீதான தீர்மானம் என்றபடியாலேயே அமெரிக்க அதிகாரிகளை அரச தரப்பினர் நேரில் சந்தித்துப் பலத்த கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர். அச்சம் காரணமாகவே அரசு இந்த நடவடிக்கையை முன்னெடுத்தது என எவரும் அர்த்தம்கொள்ளக்கூடாது" - என்று பதிலளித்தார். (இ)

# வீதியில் பயணித்த 4 பேர் முள்ளியவளையில் கைது



முல்லைத்தீவு, ஜூன் 13

முல்லைத்தீவு மாவட்டம், முள்ளியவளை - வற்றாப் பளை வீதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி வீதி யில் பயணித்த நால்வர் முள்ளியவளைப் பொலிஸாரால் நேற்று நண்பகல் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பில் இருந்து வற்றாப்பளைக்குச் சென்ற புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இருவர் மற்றும் வற்றாப்பளையைச் சேர்ந்த இருவர் உள்ளிட்ட நால்வரும் முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பயணத்தடை காலத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இவர்கள் மீது வழக்குத் தொடரப்படவுள்ளது. (இ)

# 22 வீத பாடசாலை மாணவர்கள் மாத்திரமே ஒன்லைன் மூலம் கல்வியைக் கற்கின்றனர்

கொழும்பு, ஜூன் 13

இலங்கையில் கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகளாகக் கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

ஒன்லைன் தொழில்நுட்பத்தின் உதவியுடன் கல்வி நடவடிக்கையை முன்னெடுக்க கல்வி அமைச்சு முயற்சித்து வருகின்றது. எனினும், இந்த முயற்சிகள் ஊடாக நாடு முழுவதும் ஒட்டுமொத்தமாக 22 வீத மாணவர்கள் மட்டுமே தமது கல்வியைத் தொடர்வதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் பாடசாலை மாணவர்களின் கல்வியை மீட்டெடுப்பதற்கான மாற்றுத் திட்டங்கள் குறித்து இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் ஆசிரியர் ,அதிபர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு இடையே கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, மாற்றுத் திட்டமாக அனைத்து அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சிகளும் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப கல்வி சார்ந்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



சமூக மயமாக்கல் குறித்த மாணவர்களின் மனப்பான்மையை வளர்ப்பதற்கு விரிவுரைகளுக்குப் பதிலாக கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளை ஆரம்பிக்க வேண்டும் என்றும் இதன்போது பரிந்துரைக்கப்பட்டது.

மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக எந்தவொரு உதவியையும் வழங்க தயாராக உள்ளதாக இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்த தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# கீரிமலையிலுள்ள ஜனாதிபதி மாளிகையை வெளியாருக்கு வழங்கும் திட்டத்துக்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்ற செலன்திவ முதலீட்டுத் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணம் - கீரிமலையில் மக்களின் நிலத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகை கூறுவிலை கோரல் மூலம் வெளியாருக்கு வழங்கப்படவுள்ளமை தற்போது பிரதான பேசுபொருளாக மாறியுள்ளது.

யாழ். மாநகரத்திலிருந்து சுமார் 20 கிலோமீற்றர் தொலைவிலும், இந்திய முதலீட்டில் விஸ்தரிக்கப்பட்ட பலாலி விமான நிலையத்திலிருந்து சுமார் 5.5 கிலாமீற்றர் தொலைவிலும் கீரிமலை ஜனாதிபதி மாளிகையின் அமைவிடம் உள்ளது.

செலன்திவ ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் அசையா சொத்து அபிவிருத்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள, காங்கேசன் துறையிலுள்ள சர்வதேச இணைப்பு நிலையம் அமைந்துள்ள 5 ஏக்கர் பகுதி முதலீட்டுக்காக வழங்கப்படவுள்ளது என அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, தொடர்ந்தும் கடற்படையினரின் வசமுள்ள கீரிமலை ஜனாதிபதி மாளிகையைச் சர்வதேச விருந்தினருக்கான சந்திப்பு நிலையம் எனும் பெயரில் இலங்கை முதலீட்டுச் சபை ஏலத்தில் வழங்கவுள்ளதாக செய்தி வெளியாகியிருந்தது.

இது தொடர்பில் வலிகாமம் வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வு சங்கத்தின் தலைவர் அருணாசலம் குணபாலசிங்கம் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தார்.

மக்களின் காணிப்பிரச்சினை தீர்க்கப்படாமல் அரசு அந்தப் பகுதியை எவ்வாறு மற்றவர்களுக்கு வழங்க முடியும் என அவர் கேள்வி எழுப்பினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வட மாகாண சபையின் முன்னாள் தவிசாளர் சி.வி.கே.சிவஞானமும் இந்த விவகாரம் குறித்து கருத்துத் தெரிவித்தார்.

"இந்த கட்டடத்தை மாகாண சபைக்கு கையளிக்க வேண்டும் என்ற தீர்மானம் வடக்கு மாகாண சபையில் 2016ஆம் ஆண்டு என்னால் முன்வைக்கப்பட்டது. அந்தப் பிரேரணை ஜனாதிபதிக்கும் பிரதம மந்திரிக்கும் எம்மால் அனுப்பிவைக்கப்பட்டது" என்று அவர் கூறினார்.

பெருந்தொற்றுக் காலத்தில் அதனை அவசரப்பட்டு வழங்குவதற்கான தேவை என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

குறித்த பகுதியில் கடற்படையினரால் விடுவிக்கப்படாதுள்ள காணி உரிமையாளர்களும் இந்தச் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். (இ - 03)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.06.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-டியட்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-
திறமையாளர்களுக்கான களம்

**இரவு**
7.00 மணி : SPOTLIGHT- தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலாசகர்-சட்டத்தரணி ந.காண்டீபன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி :செல்லாடுகளம்
10.00 மணி:பதிவு-நேர்கொண்ட பார்வை - இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உப தலைவர் செந்தில் தொண்டமான்



**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு